அலகு 13

# ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

## கற்றலின் நோக்கங்கள்

கீழ்க்காணும் அம்சங்களோடு அறிமுகமாதல்

- சந்தையைக் கைப்பற்றும் நோக்கில் ஏகபோக தொழில்முறையும், நிதியும் ஏற்படுத்திக் கொண்ட கூட்டணியின் சூழலில் எழுந்த ஏகாதிபத்தியத்தைக் குறித்து அறிதல்
- காலனிகளை உருவாக்க ஏற்பட்ட போட்டியும் அதனால் நாடுகளுக்கிடையே எழுந்த முரண்போக்குகளும் முதல் உலகப்போருக்கு வழிவகுத்தல் பற்றி அறிந்து தெளிதல்
- முதல் உலகப்போர் உருவானதற்கான காரணங்கள், போக்குகள், மற்றும் விளைவுகள் போன்ற கூறுகளை அலசி ஆராய்தல்
- ரஷ்ய புரட்சியையும் அதன் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளல்
- 1930களின் பொருளாதாரப் பெருமந்தத்தை உள்ளார்ந்து உணர்தல்
- இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிச எதிர்–புரட்சி நேர்ந்தமையை மதிப்பீட்டிற்கு உட்படுத்துதல்

## அறிமுகம்

பதினெட்டாம் நூற்றாண்டு முழுவதும் தொழிற்துறை நிலையான வளர்ச்சியை எதிர்கொண்டதோடு வணிக நடவடிக்கைகளும் தீவிரமடைந்தன. இதன் விளைவாக ஐரோப்பா ஒரு ஆதிக்க சக்தியாக ஏற்றம் கொண்டதோடு ஆசியாவும் ஆப்பிரிக்காவும் காலனிகளாக மாற்றப்பட்டு சுரண்டலுக்கு உட்படுத்தப்பட்டன. முதலாளித்துவத்தின் உலகளாவிய தலைமைபீடத்தை இங்கிலாந்து தக்கவைத்துக் கொண்டது போன்ற மெய்ம்பிம்பம் ஐரோப்பாவினுள் எழுந்தது. போக்குவரத்திலும், தகவல் தொடர்பிலும் 1870 முதல் 1914 வரையிலான காலத்தில் ஏற்பட்ட புரட்சி உலகப் பொருளாதாரத்தை வளர்த்தெடுத்தது. நீராவிகப்பல்களும், தந்தி கம்பிகளும் கண்டங்களை ஒருபுறம் இணைக்க மறுபுறம் உட்பகுதிகளை துறைமுகங்களோடு இருப்புப்பாதைப் போக்குவரத்து இணைத்தது. ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்க ஐக்கிய நாட்டிலிருந்தும் நிதி இடம்பெயர்ந்து உலக வணிகத்தை மேம்படுத்தியது. சந்தைகளுக்கும் மூலப்பொருள்களுக்குமான தேவை விரிவடைந்துகொண்டே சென்றதால் முதலாளித்துவ சக்திகளும் போட்டி மனப்பான்மையோடு சுரண்டலை முன்னிறுத்திய தங்களின் இராஜ்ஜியத்தை விரிவடையச் செய்ய களமிறங்கினார்கள். சந்தைகளுக்கான தேடுதலும் கடுமையான வியாபாரப் போட்டியும் அதிகமான காலனியப் பகுதிகளை கட்டுப்படுத்தும் முனைப்பில் விளைந்த சண்டைகளும், போட்டி நாடுகளை முரண்பாடுகளுக்குள் மூழ்கச் செய்தது.

தனது தகுதிக்கேற்ற சரியான மரியாதையைப் பிறநாடுகள் வழங்கவில்லை என்ற உணர்வு, அதிலும் குறிப்பாக பிரிட்டனைப் பொறுத்தமட்டில் ஜெர்மனியை சமரசப்படுத்த முடியாத போக்கைக் கொண்ட நாடாக்கியது. கடைசியில் பரஸ்பர நம்பிக்கையின்மையும், இறுக்கம் நிறைந்த சூழலும் முதல் உலகப்போருக்கு இட்டுச்சென்றது. போரில் ஜெர்மனியும், அதன் கூட்டுநாடுகளும் தோற்கடிக்கப்பட்டு அதன்பின் வெர்செய்ல்சில் (1919) அமைதி ஏற்படுத்தும் பொருட்டு ஒரு மாநாடு கூட்டப்பட்டது. தீர்வுகளில் சிறப்பான ஒன்றாக விளங்கியது பன்னாட்டு சங்கத்தை ஏற்படுத்தியதும் அதனூடாக எதிர்காலத்தில் உலக அமைதியை நிலைநிறுத்த உறுதிகொள்ளல் என்பதுமாகும். முதல் உலகப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அதனால் ஏற்பட்ட பணவீக்கமும் உணவுப் பற்றாக்குறையும் ரஷ்யாவில் புரட்சியை வெடிக்கச் செய்தது. மற்றொருபுறம் அமைதி



12th_History_TM_Unit_13_V2.indd 222 1/6/2022 1:53:44 AM

உடன்படிக்கை ஏற்படுத்திய அதிருப்தி, அரசியல் நிலையற்றத்தன்மை, பொருளாதார பெருமந்தத்தின் தாக்கம் ஆகியவை இத்தாலியிலும், ஜெர்மனியிலும் பாசிச அரசுகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது.

## 13.1 ஏகாதிபத்தியத்தின் தோற்றம்

### தொழில் மூலதன ஆதிக்கமும் தடையற்ற வணிகத்திற்கான ஆலோசனையும்

பதினேழாம் நூற்றாண்டில் ஒரு நாட்டின் பெருமையானது அதன் வணிகத்தைக் கொண்டே நிர்ணயிக்கப்படுவதாகக் கருதப்பட்டது. இதனால் இயல்பாகவே நாட்டின் ஆர்வமும் வியாபார வர்க்கத்தின் ஆர்வமும் ஒத்திருந்தன. தொழிற்புரட்சிக்கு வித்திட்ட மூலதன குவிப்பே வணிக காலம் (1600–1700) முழுவதிலும் ஐரோப்பாவில் வியாபித்து நின்றது. முக்கிய சக்திகளான ஹாலந்து, பிரான்ஸ், இங்கிலாந்து போன்றவை காலனிய ஆதிக்க தேசங்களாக உருவெடுத்ததோடு கடல்கடந்து பரந்துவிரிந்த சந்தைகளைக் கொண்டவைகளாகவும் திகழ்ந்தன. எனினும் இங்கிலாந்தே தொழிற்புரட்சியின் பலன்களை முதலாவதாக முழுவதுமாகப் பயன்படுத்தி பெரும்சக்தியாக வெளிவந்தது. ஆரம்பத்தில் ஏற்றுமதி சந்தைகள் அந்நாட்டிற்கு ஐரோப்பாவினுள்ளே அமைந்திருந்தன. ஆனால் மற்றநாடுகள் தொழில்மயத்தில் இறங்கியவுடன் மிகைஉற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை ஏற்றுமதிக்குட்படுத்த ஏற்ற சந்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.



வணிக காலம்

துவக்கத்தில் இருந்தே வணிகவாதம் கடும் தாக்குதலுக்கு உள்ளாகி வந்தது. பிரான்சில் தொழில்களுக்கு அளவுகடந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டமை, பின்னர் அனைத்துக் கட்டுப்பாடுகளையும் மொத்தத்தில் தளர்த்தக் கோருமளவிற்குச் சென்றது. பிரான்சின் இயலாட்சி ஆதரவாளர்கள் (Physiocrats) தடையற்ற வாணிபத்தை நடைமுறைப்படுத்தக் கோரினார்கள். டெ கௌர்னே என்ற பிரெஞ்சு வணிகர் உருவாக்கிய அரசின் தடையற்ற (Laissez–faire) என்னும் சொல் உலகளாவியப் பிரபலமானது.



ஆடம் ஸ்மித்

ஸ்காட்டிய தத்துவஞானியும், பொருளாதார அறிஞருமான ஆடம் ஸ்மித் 1776இல் *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations* எனும் தனது நூலில் வணிக வர்க்கத்தின் காலனியக் கொள்கைகளை விமர்சித்து தடையற்ற வணிகத்தையும், தடையில்லாத சந்தைகளையும் வரவேற்றார். அக்காலத்தைய அரசியல் தலைவர்களை ஸ்மித்தின் நாடுகளின் செல்வம் பெரிதும் கவர்ந்ததோடு பத்தொன்பதாம் நூற்றாண்டை தடையற்ற வணிகத்தின் காலமாக உருவாக்கவும் வழிவகுத்தது.

தனது ஏகபோக வணிகத்தால் பெரும் லாபம் சம்பாதித்திருந்த இங்கிலாந்து 1833இல் தடையற்ற வணிகக்கொள்கையை நடைமுறைப்படுத்த முடிவுசெய்தது. இங்கிலாந்தின் இம்முடிவைப் பின்பற்றி பெல்ஜியம், நெதர்லாந்து, நார்வே, பியட்மாண்ட், போர்த்துகல், ஸ்பெயின், ஸ்வீடன் ஆகிய நாடுகளும் தடையற்ற வியாபாரக்கொள்கையை ஏற்றுக்கொண்டன. இதன் விளைவாக வணிகத்தடங்கள் சுருங்கவும் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரம் ஏற்றமும் பெறலாயிற்று. தடையற்ற போட்டியை உள்வாங்கி வளர்ந்த முதலாளித்துவம் (அரசின் கட்டுப்பாடோ, முறைப்படுத்தலோ இல்லாத தடையற்ற வணிகத்தை கொள்கையாகக் கொண்டு) பின்னர்

விலையையும், தயாரிப்பையும் கட்டுப்படுத்துவதற்காக ஒரு பொருளின் தயாரிப்பாளர்கள் அனைவருமோ அல்லது பெரும்பகுதியினரோ கூடி உருவாக்குவதே அறக்கட்டளையாகும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் கனரக தொழிற்சாலைகள் யாவும் அறக்கட்டளை–சங்கம் (Trust–Association) மூலமாகவே நிர்வகிக்கப்பட்டு அவற்றின் தயாரிப்பில் மூலப் பொருள்களை எடுப்பதில் துவங்கி தயாரித்து முடிக்கப்பட்ட பொருள்களை வெளியேற்றுவது வரை கட்டுப்படுத்தியது. ஒரு தனிப்பட்ட நிறுவனத்தின் அங்கமாக செயல்பட்டு தாங்கள் விற்பனை செய்யும் பொருள்களில் போட்டியை வரையறைப்படுத்த உருவாக்கப்படும் அமைப்பே கார்டெல் ஆகும். ஜெர்மானிய தயாரிப்பாளர்களின் செயல்திறனை உலக வணிகத்தில் பெரிதும் மேம்படுத்தியதால் கார்டெல்கள் செழித்துப் பரவின.



12th_History_TM_Unit_13_V2.indd 223 1/6/2022 1:53:44 AM

ஏகபோக முதலாளித்துவமாக வடிவெடுத்தது. மார்க்சின் பார்வையில் போட்டியென்கிற போரில் சிறு வணிகங்கள், பெரு வணிகங்களால் நசுக்கப்படவோ, மேலும் விரிவுபடுத்திக்கொள்ளும் நோக்கோடு உள்வாங்கப்படவோ உள்ளாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியில் கூட்டு வணிகமுறையும் (Partnership), கூட்டுப் பங்கு வர்த்தக முறையும் (Joint Stock Company), தளர்ந்து அறக்கட்டளைகளுக்கும் (Trust), அதன்பின் கார்டெல்களுக்கும் (Cartel) வழியேற்படுத்தின. வலிமைபெற்ற அறக்கட்டளைகளும், கார்டெல்களும் அரசிடம் மிகுந்த செல்வாக்குக் கொண்டிருந்தன.

## 13.2 காலனியப் பரவலும் போரைநோக்கிய பாதையும்

### அ) மூலப்பொருள்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்டப் பொருள்களுக்கான சந்தை, காலனியப் பரவலுக்கு வழி ஏற்படுத்துதல்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் பல நாடுகளும் மிகைஉற்பத்தி செய்யப்பட்ட பொருள்களால் எழுந்த பிரச்சனையை தீர்ப்பதற்காக வெளிசந்தையை தேடும் கட்டாயத்தில் இருந்தன. இப்பிரச்சனைக்கான நிரந்தரத்தீர்வை இங்கிலாந்தின் அனுபவ வழி பார்க்கும்போது காலனிய நாடுகளைத் தங்களின்கீழ் கொண்டிருப்பதே சரி என்று விளங்கியது. மிகைஉற்பத்திக்கான சந்தையாக இருப்பது நீங்கலாக காலனியப் பிரதேசங்கள் மற்றொரு நோக்கத்தையும் நிறைவு செய்யக்கூடும். பெரும் உற்பத்தியில் ஈடுபட அதிக அளவிலான தானியங்கள், பருத்தி, ரப்பர், கச்சா எண்ணெய், தாதுக்கள் போன்ற மூலப்பொருள்களும் தேவைப்பட்டன. தொழிற்சாலை முதலாளிகள் இதற்காக வேறு நாடுகளைச் சார்ந்திருக்க விரும்பவில்லை. அவர்கள் முலப்பொருள்களின் விளைச்சல் ஏற்படும் மூலாதாரத்தையே தங்களின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க எண்ணம் கொண்டார்கள். முதலாளிகள் சந்தைகளை உருவாக்கக் கொண்ட விருப்பமும், மூலப்பொருள்கள் விளையும் பகுதிகளைக் கட்டுப்படுத்த காட்டிய முனைப்புமே ஏகாதிபத்தியத்தைக் கட்டியெழுப்ப முக்கியப் பங்காற்றின.

இங்கிலாந்து 1870களுக்குப்பின் பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலி, ஜெர்மனி போன்ற மிகைஉற்பத்தி செய்த நாடுகளோடு பொருள்களை விற்கும் சந்தைகளைக் கொண்ட காலனிய நாடுகளை கட்டுப்படுத்துவதில் போட்டியில் இறங்கியது. அமெரிக்காவின் முறை 1898இல் அது ஸ்பெயினை தோற்கடித்து பிலிப்பைன்ஸை தனது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தபோது ஏற்பட்டது. இதில் சுவாரஸ்யமான ஒன்று என்னவென்றால், இந்தியா, சீனா, ஆப்பிரிக்கா ஆகிய எந்த நாட்டிலானாலும் ஒருங்கிணைப்பிற்கான முதல் முயற்சியை ஏகாதிபத்திய முகவரோ, சமயப் பணியாளர்களோ, ஏகபோக அந்தஸ்தைக் கொண்ட வியாபார நிறுவனமோதான் மேற்கொண்டுள்ளார்கள். இருபது ஆண்டுகளுக்கும் குறைந்த காலத்தில் மத்திய ஆப்பிரிக்கா முழுவதும் பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, பெல்ஜியம், போர்த்துகல், இத்தாலி ஆகிய நாடுகளால் பங்குவைத்துக் கொள்ளப்பட்டது.

ஆப்பிரிக்காவின் 10 சதவீத அளவிலான இடங்களே 1876இல் ஐரோப்பாவின் கட்டுப்பாட்டில்

**ஆப்பிரிக்காவை பிரித்தல்:** பெல்ஜிய மன்னரான இரண்டாம் லியோபால்ட் 1876இல் தனது சர்வதேச ஆப்பிரிக்க சங்கத்தின் வாயிலாக ஆய்வுநடத்தி மிகச்சிறந்த ரப்பர் விளையும் பகுதியை அடையாளப்படுத்தி தன் நாட்டோடு இணைத்த பகுதியே தற்காலத்தில் பெல்ஜிய காங்கோ என்றழைக்கப்படுகிறது. அதுபோன்றே பிரெஞ்சுக்காரர்களும் டுனிஸ் பகுதியை தன்னுடன் இணைக்கும் எண்ணம் கொண்டிருந்த இத்தாலியர்களின் அதிருப்தியை சம்பாதிக்கும் விதமாக 1881ஆம் ஆண்டு அப்பகுதியில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு தங்கள் வசப்படுத்தினார்கள். இதுபோன்றே 1891இல் ஐவரி கோஸ்ட்டையும், 1892இல் டஹோமேயையும் (Dahomey), 1895இல் மடகாஸ்கரையும் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். பிரிட்டன் தென் ஆப்பிரிக்காவின் நடாலையும் டிரான்ஸ்வாலையும் இணைத்துக்கொண்டதோடு ஆப்பிரிக்காவின் பிற பகுதிகளையும் இணைத்தது. பிரிட்டன் 1883ஆம் ஆண்டு எகிப்தின் மீது தனது கட்டுப்பாட்டை நிறுவியது. கோல்ட் கோஸ்ட் காலனிகள், உகாண்டா, சான்சிபார், கிழக்கு ஆப்பிரிக்காவின் சில பகுதிகள் ரொடீஷியா போன்றவை அடுத்தடுத்து பிரிட்டிஷ் இராஜ்ஜியத்தின் அங்கங்களாயின. ஜெர்மனி 1884ற்கும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் டோகோலாந்து, கேமரூன், ஜெர்மானிய தென்–மேற்கு ஆப்பிரிக்கா, ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய பகுதிகளை ஆக்கிரமித்துக் கொண்டது. அந்நூற்றாண்டின் முடிவில் நில ஆக்கிரமிப்பிற்கான போட்டி இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆப்பிரிக்கா முழுமையும் பெரும் ஐரோப்பிய சக்திகளுக்கிடையே பிரித்துக் கொள்ளப்பட வழி ஏற்படுத்தியது. லைபீரியா, மொராக்கோ, அபிசீனியா ஆகிய நாடுகளே இணைக்கப்படாமல் எஞ்சி நின்றன.




12th_History_TM_Unit_13_V2.indd 224 1/6/2022 1:53:44 AM

இருந்தது. ஆனால் 1900இல் ஏறக்குறைய ஆப்பிரிக்கா முழுமையும் காலனிய ஆதிக்கத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்தன. பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் ஆகிய நாடுகள் பெருவாரியான பகுதிகளை எடுத்துக்கொண்டு எஞ்சிய சொற்பப்பகுதிகளை ஜெர்மனியும், இத்தாலியும் எடுத்துக்கொள்ள விட்டுவிட்டன. பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா, ஜெர்மனி ஆகிய நாடுகள் சீனாவிற்குள்ளும் தத்தம் "செல்வாக்கிற்குட்பட்ட கோளங்களை" உருவாக்கி எடுத்துக்கொண்டன. ஜப்பான், கொரியாவையும் தைவானையும் எடுத்துக்கொண்டது. பிரான்ஸ் இந்தோ–சீனாவை கைப்பற்றியது; அமெரிக்க ஐக்கிய நாடு பிலிப்பைன்ஸை ஸ்பெயினிடமிருந்து எடுத்துக்கொண்டது, பிரிட்டனும் ரஷ்யாவும் ஈரானை பங்கு வைத்துக்கொள்ள முடிவுசெய்தன.

பிற இடங்களில் நிகழ்ந்தது போன்றே காலனியப் பகுதிகளை உருவாக்கும் முனைப்பில் ஆப்பிரிக்காவிலும் பெரும் போர்கள் நடத்தப்பட்டு அதன் பூர்வீககுடிகள் தோற்கடிக்கப்பட்டார்கள். புதிய வகை ஆயுதங்களான ப்ரீச்–லோடிங் துப்பாக்கியும், கேட்லிங் எந்திரத் துப்பாக்கியும் (Breech–loading rifles and gatling machine guns) போரைத் தங்களுக்கு சாதகமாகத் திருப்பும் திறனை ஐரோப்பியப் படையினருக்கு வழங்கின.

### ஆ) ஏகபோக முதலாளித்துவம் முழுமையான ஏகாதிபத்தியத்திற்கு கொண்டு செல்லப்படல்

ஏகபோக தொழில்கள் முதலாளிகளுக்குப் பெரும் லாபத்தைக் குவித்தன. இதன் விளைவாக மிகையாகப் பணம் குவியத்துவங்கியது. தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் முதலீடுகளை ஏற்றுமதி செய்தால் அவை அதிகமான லாபத்தை ஈட்டும் என்று உணர்ந்தார்கள். இம்மிகைப் பணத்தை இருப்புப்பாதைக்கும், மின்சார உற்பத்திக்கும், சாலைகளுக்கும் அதீத தேவை இருந்த காலனிய நாடுகளில் முதலீடு செய்தார்கள். நேரடி முதலீடு நீங்கலாக கடனாகவும் பணத்தை அனுப்ப 'தாய் நாடு' முன்வந்தது. இதனால் இங்கிலாந்து இருப்புப்பாதை தண்டவாளங்கள் போடவும் இரயில் பெட்டிகள், இரயில் எந்திரம், போன்றவற்றை வாங்கவும் கடன்கொடுத்ததால் அப்பணம் மீண்டும் இங்கிலாந்து கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்த உற்பத்தியாளர்களிடம் அவர்களின் லாபத்தை முன்னிறுத்தி தேவைப்படும் பொருள்கள் வாங்கப்பட்டன. இதனால் முதலீடு செய்வோரும், உற்பத்தியாளர்களும் காலனிய அமைப்புமுறை தங்களுக்குச் சாதகமாக இருப்பதை உணர்ந்தார்கள். இதுவே நிதிக்கும் தொழிலுக்கும் உள்ள கூட்டு என்று பொருளாதார அறிஞர்கள் கூறுகிறார்கள். தொழிலுக்கும், நிதிக்குமிடையே ஏற்பட்ட இக்கூட்டு பொருள்சந்தையிலும், முதலீடானது சந்தையிலும் லாபத்தை அடிப்படையாகக்கொண்டு செயல்படுவதே ஏகாதிபத்தியத்தின் முக்கிய குணநலனாகும்.


ஜான் A. ஹாப்சன்

ஆங்கிலப் பொருளாதார நிபுணரான ஜான் A. ஹாப்சன் ஏகாதிபத்தியத்தை இவ்வாறு வரையறுக்கிறார்: ஏகாதிபத்தியம் என்பது தொழிலை கட்டுப்படுத்துவோர் தங்கள் செல்வங்கள் சென்றுசேரும் பாதையை விசாலப்படுத்தி அயல்நாட்டு சந்தைகளையும், அயல்நாட்டு நிதியையும் பயன்படுத்தி தாங்கள் உள்ளூரில் விற்க முடியாத பொருள்களையும், சந்தைப்படுத்த முடியாத மூலதனத்தையும் பயன்பாட்டிற்குக் கொண்டுவர எடுக்கும் முயற்சியே என்கிறார்.

### இ) பாதுகாப்புவாதமும், அது ஏற்படுத்திய அரசியல் பிணக்குகளும்

வியன்னாவிலும் நியூயார்க்கிலும் 1870இன் மத்தியிலேற்பட்ட நிதிவீழ்ச்சி ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் முழுமையான பொருளாதாரப் பெருமந்தத்தை உருவாக்கின. பெருமந்தம் உற்பத்தியையும் விலைகளையும், கூலியையும் கடுமையாக பாதித்தது. மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சந்தையில் குறைந்த விலை கொண்ட தானியங்கள் வந்துசேர்ந்து ஏற்கனவே விலைவீழ்ச்சியால் பாதிக்கப்பட்டிருந்த உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு மேலும் இக்கட்டைக் கொடுத்தது. மக்கள் தடையற்ற வணிகத்தின் ஞானத்தை கேள்விக்குட்படுத்தினார்கள். நிலைமையை கட்டுப்படுத்தும் முகமாக ஜெர்மனி பாதுகாப்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தியது. தொழிற்சாலை பொருள்களின் இறக்குமதிக்கும், வேளாண் பொருள் இறக்குமதிக்கும் கட்டணம் விதிக்கும் விதமாக 1879இல் கட்டணச் சட்டத்தை ஏகாதிபத்திய ஜெர்மனிக்குள் நடைமுறைப்படுத்தியது. விரைந்து பிறநாடுகளும் இந்நடவடிக்கையை பின்பற்றின. பிரிட்டன் தனது காலனிய வியாபார முன்னுரிமையை மாற்றிக்கொள்ள வழியிருந்ததால் அது பிரான்சோடும், ஜெர்மனியோடும் 1898ஆம் ஆண்டு ஏற்படுத்திய வணிக உடன்படிக்கைகளை ரத்து செய்தது. வெவ்வேறு ஐரோப்பிய சக்திகளும் கட்டண நடவடிக்கையிலும், பதில்–கட்டண நடவடிக்கையிலும் இறங்கியதால் பாதுகாப்புவாதம் உச்சமடைந்ததோடு அது அரசியல்



12th_History_TM_Unit_13_V2.indd 225
1/6/2022 1:53:44 AM

முரண்பாடுகளுக்கும் வழியேற்படுத்தியது. இம்முரணால் விளையும் சிக்கல் என்பது படைபலத்தைச் சார்ந்தே அமையும் என்பது பேரரசுகளை நிர்வகித்த தலைமைக்குத் தெளிவாகத் தெரிந்திருக்கவே செய்தது. அதனால் தங்களின் ஆயுத பின்புலத்தை பலப்படுத்த போட்டியிட்டதில் போருக்குரிய சூழ்நிலைகள் இயல்பாகவே தோன்றத்தொடங்கின.

## 13.3 முதல் உலகப்போர்

### அ) போருக்கு முந்தைய அதிகார அரசியல்

#### ஐரோப்பா

புதிய நூற்றாண்டு பிறந்தபோது அக்கண்டத்தில் ஜெர்மனியே தொழிற்துறையில் மேம்பட்ட நாடாக விளங்கியது. எனினும் உலகின் பெருவாரியான பகுதிகளை பிற ஏகாதிபத்திய சக்திகளே தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டிருந்தன. மன்னர் இரண்டாம் கெய்சர் வில்லியமின் காலத்தில் ஜெர்மனியும் தனது ஆட்சியின் கீழ் அதிகமான காலனிகளை கொண்டிருக்க விரும்பியது. அது வட ஆப்பிரிக்காவை கட்டுப்படுத்தும் லட்சியம் கொண்டிருந்தது. ஜெர்மானிய முதலாளிகளும், ஏகாதிபத்தியவாதிகளும் கிழக்கு திசை நோக்கிய விரிவை விரும்பியதால் அரசும் பெர்லின் முதல் பாக்தாத் வரை இருப்புப்பாதையை உருவாக்கி ஆட்டோமன் பேரரசை பொருளாதார அடிப்படையில் கட்டுப்படுத்தும் கடமை கொண்டிருப்பதாகக் கருதியது.



கெய்சர் இரண்டாம் வில்லியம்



பிராங்கோ–பிரஷ்யப் போர்

1871இல் நடந்த பிராங்கோ–பிரஷ்யப் போரில் பிரான்ஸ் தான் இழந்த அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளைத் திரும்பப்பெற்றுவிடும் குறிக்கோள் கொண்டிருந்தது. அந்நாடு தாதுவளம் மிக்க மொராக்கோ பகுதியை ஆப்பிரிக்காவில் இருந்த தனது பேரரசின் பகுதியாக மாற்ற நினைத்தது. ரஷ்ய நாடு மத்தியதரைக் கடல் பகுதியை அணுகவும், இஸ்தான்புல்லை தனதாக்கிக் கொள்ளவும் வழிவகை செய்யும் என்பதால் பாஸ்போரஸ் பகுதியையும், டார்டெனெல்ஸ் பகுதியையும் (அச்சமயம் துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்தது) தான் கொள்ள நினைத்தது. துருக்கி ஐரோப்பாவில் இருந்து ஒதுக்கப்பட்டால் பால்கன் பகுதி மீது தான் உரிமை கோரலாம் என ரஷ்யா திட்டம் தீட்டியது. இத்தாலிய வெளியுறவுக் கொள்கையின் அடிநாதமே ஆஸ்திரியாவிற்கும், துருக்கி நாட்டிற்கும் விரோதமானதாகும். இத்தாலிய மக்கள்தொகையை அதிகமாகக் கொண்டிருந்த டிரையஸ்ட் மற்றும் ஏட்ரியாட்டிக் கடற்கரைப்பகுதி மீது ஆஸ்திரியாவின் கட்டுப்பாடு உறுதியற்ற ஒன்றாகவே திகழ்ந்தது. இத்தாலி ட்ரிப்போலியையும், பிற வட ஆப்பிரிக்கப் பகுதிகளையும் ஆக்கிரமிப்பதை துருக்கி தடுத்தது பிரிட்டனைப் பொறுத்தவரை பெரும் தொழில் வளர்ச்சியையும், நீண்டு பரவிய பேரரசையும் கொண்டிருந்தபோதும் குறைந்த விலையிலான ஜெர்மன் பொருள்களும், அமெரிக்க ஐக்கிய நாட்டின் பொருள்களும் இதன் சந்தையில் ஆக்கிரமித்ததால் அந்த வகையில் இவ்விரு நாடுகளோடு போட்டியிடவேண்டிய அவசியம் அதற்கு இருந்தது.

#### ஆசியா

மெய்ஜி சகாப்தத்தில் (1867–1912) படித்து கல்வியறிவுபெற்ற மக்களைக் கொண்ட ஜப்பானில் தொழில்வளம் பெருகியதோடு, அம்மக்களிடையே ஆக்கிரமிப்பு அடிப்படையிலான தேசியவுணர்வு ஊற்றெடுத்து தாங்களும் உலகசக்திகளில் ஒன்றாகத் திகழவேண்டும் என்ற லட்சியம் உருவானது. இதனால் சீனாவை பிடிக்கும் போட்டியில் ஜப்பானும் களமிறங்கியது. அப்போது சுதந்திர நாடாக இருந்த கொரியா மீது ஜப்பான் படையெடுத்து அங்கிருந்த சீனப் படைகளை விரட்டியது. அதன்பின் நடந்த சீனா–ஜப்பானியப் போரின் முடிவில் ஏற்படுத்தப்பட்ட ஷிமனோசெகி உடன்படிக்கையின்படி (Treaty of Shimonoseki) ஜப்பானிற்கு ஃபார்மோசா, ஆர்தர் துறைமுகம், லியோடுங் தீபகற்பம் (Liaotung Peninsula) ஆகிய பகுதிகள் வழங்கப்பட்டன. சிறிய நாடான ஜப்பான், சீனாவை போரில் தோற்கடித்தமை (1894–95) உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஜப்பானின் இந்த திடீர் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய ஐரோப்பிய சக்திகள் ஜப்பானை லியோடுங் தீபகற்பத்தை ஒப்படைக்கும்படி செய்தன. இந்த "மூவர் தலையீட்டை" (Triple Intervention – பிரான்ஸ், இங்கிலாந்து, ரஷ்யா ஆகிய நாடுகள் 1895இல் செய்த குறுக்கீடு) சினத்தோடு எதிர்கொண்ட ஜப்பான் மிகப்பெரிய போர்த்தளவாடத் திட்டத்தை வகுத்தது.



12th_History_TM_Unit_13_V2.indd 226 1/6/2022 1:53:45 AM

### பெரும் சக்திகளின் வசீகர வட்டத்தில் ஜப்பான்

சீனா–ஜப்பானியப் போரைக்காட்டிலும் ஜப்பான் ரஷ்யாவை 1904–05இல் நடந்த போரில் தோற்கடித்தமை பெரும் முக்கியத்துவம் கொண்டதானது. "மூவர் தலையீட்டை" தொடர்ந்து ரஷ்யா தெற்கு மஞ்சூரியாவை ஆக்கிரமித்தது. ஜப்பான் 1902ஆம் ஆண்டில் இங்கிலாந்தோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்தி அதன் வாயிலாக ரஷ்யாவை தமது படைகளை விலக்கிக்கொள்ள வலியுறுத்தியது. ரஷ்யா ஜப்பானை குறைத்து மதிப்பிட்டிருந்தது. 1904இல் போர் வெடித்துக் கிளம்பியது. ரஷ்ய–ஜப்பானியப் போரான இதில் ஜப்பான் வெற்றிபெற்று அமெரிக்க ஐக்கிய நாட்டின் மத்தியஸ்தத்தின் கீழ் போர்ட்ஸ்மவுத் உடன்படிக்கையை கையெழுத்திட்டு ஆர்தர் துறைமுகத்தை மீண்டும் பெற்றது. இப்போரின் வாயிலாக ஜப்பான் பெரும் சக்திகளின் வசீகர வட்டத்தில் நுழைந்தது.

### 1905க்குப் பின்னர் ஜப்பான் பின்பற்றிய வலுத்த–கர இராஜதந்திரம்

ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஜப்பானிய தூதர் கொரிய நாட்டைச் சேர்ந்த ஒருவரால் படுகொலை செய்யப்பட்டது ஜப்பானுக்கு 1910இல் கொரியா மீது படையெடுக்க காரணமாக அமைந்தது. சீனாவில் 1912இல் மஞ்சு வம்சத்தின் வீழ்ச்சிக்குப்பின் நேர்ந்த குழப்பம் ஜப்பானுக்கு தனது எல்லையை விரிவுபடுத்திக் கொள்ள மற்றொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. ஜப்பான் 1915ஆம் ஆண்டு புதிதாக உருவாகியிருந்த சீன குடியரசின் தலைவரான யுவான் ஷிகாய் முன்பு 21 நிர்ப்பந்தங்களை சமர்ப்பித்தது. இந்நிர்ப்பந்தங்களில் ஜெர்மானியர்களுக்கு சீன கடலோர மாகாணமான ஷாண்டுங்கில் வழங்கப்பட்டிருந்த உரிமையை தங்களுக்கு மாற்றிக் கொடுக்கவும், மஞ்சூரியாவில் ஜப்பானின் ஆதிக்கத்தை அங்கீகரிக்கவும், சீன அரசிற்கு ஜப்பானிய ஆலோசகர்களை நியமிக்கவும் கோரப்பட்டிருந்தது. பெருவாரியான ஜப்பானின் கோரிக்கைகளுக்கு சீனா உடன்படும்படியானது.

### ஆ) போருக்கான காரணங்கள்

#### i) கூட்டணிமுறையின் பரிணாமம்

கூட்டணி முறையின் தோற்றம் 1870களில் இருந்து துவங்கியதாகத் தெரிகிறது. அதன் முதல் வடிவமைப்பாளர் பிஸ்மார்க் ஆவார். பிரான்ஸ் நாடு அல்சேசையும், லொரைனையும் இழந்தமைக்குப் பழிவாங்கக்கூடும் என்று பிஸ்மார்க் எதிர்பார்த்தார். அதனால்பிரான்சைதனிமைப்படுத்தஅவர் தீர்மானம் கொண்டார். எனினும் ஜெர்மனி, ஆஸ்திரியா, ரஷ்யா ஆகிய நாடுகளை இணைத்து அவர் 1873இல் உருவாக்க நினைத்த மூன்று பேரரசர்களின் கழகம் தோல்வியையே சந்தித்தது. ஆனால் தனது எல்லைக்குள்ளும், வெளியிலும் ஸ்லாவ்களிடமிருந்து பிரச்சனையை எதிர்நோக்கியிருந்த ஆஸ்திரியா மட்டும் ஜெர்மனியோடு ஆழ்ந்த புரிதலை விரும்பியதால் அந்நாட்டுடன் மட்டும் பிஸ்மார்க்கால் வலுவான உறவை ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. இக்கூட்டணி 1882இல் இத்தாலியையும் தன்னகத்தே இணைத்ததால் மூவர் கூட்டணியாக விரிவடைந்தது.



பிஸ்மார்க்

ஜெர்மனியின் நகர்விற்கு எதிர்நகர்வை முன்வைக்க விழைந்த பிரான்ஸ் 1894ஆம் ஆண்டு ரஷ்யாவோடு ஒரு இரகசிய இராணுவ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதன்படி பிரான்சையோ, ரஷ்யாவையோ தாக்க ஜெர்மனியோ அல்லது ஜெர்மனியின் மேற்பார்வையில் ஆஸ்திரியாவோ, இத்தாலியோ முற்பட்டால் இருநாடுகளும் பரஸ்பரமாக உதவிக்கொள்வது என்று முடிவுசெய்யப்பட்டது. இதற்கிடையே தனது தனிமையை தூக்கி எறிந்த பிரிட்டன் ஜப்பானோடு ஒரு கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டது. பிரான்ஸ் ரஷ்யாவின் கூட்டு நாடு என்பதால் ஜப்பான் பிரிட்டனோடு (1902) நெருக்கம் கொள்வதை விரும்பியது. ஆங்கிலோ–ஜப்பானியக் கூட்டால் சுதாரித்த பிரான்ஸ், பிரிட்டனின் நட்பைக் கோரி மொராக்கோ, எகிப்து சார்ந்த பிணக்குகளைத் தீர்க்க முன்வந்தது. இது 1904இல் 'நாடுகளுக்குள் ஒத்துப்போகிற நட்புறவை' (Entente Cordiale) விளைவித்தது. மொராக்கோவில் பிரான்சை தன்னிச்சையாக செயல்படவிடுத்து பிரிட்டன் எகிப்தை ஆக்கிரமித்தமைக்கு பிரான்சின் அங்கீகாரத்தைப் பெற்றது. தொடர்ந்து 1907இல் பிரிட்டன் ரஷ்யாவோடு ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி பாரசீகத்தை செல்வாக்கிற்குட்பட்ட கோளங்களாகப் பிரித்தது. இவ்வாறு பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா ஆகிய நாடுகளை அங்கமாகக் கொண்டு முக்கூட்டு நட்பு (Triple Entente) உருவாக்கப்பட்டது.

ஐரோப்பாவின் பெரும் சக்திகள் 1907ஆம் ஆண்டில் இரு எதிரெதிர் முகாம்களாக மூவர் கூட்டணி (ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, இத்தாலி) என்றும், முக்கூட்டு நட்பு (பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா) என்றும் உருவெடுத்து நின்றன.



12th_History_TM_Unit_13_V2.indd 227 1/6/2022 1:53:45 AM

### ii) 1905 முதல் 1913 வரை ஏற்பட்ட நெருக்கடிகள்

#### மொராக்கோ

இங்கிலாந்தோடு ஏற்பட்ட புரிதலை முன்னிறுத்தி (Entente Cordiale, 1904) பிரான்ஸ் மொராக்கோவில் தனது திட்டங்களுக்கு செயல்வடிவம் கொடுக்க நினைத்தது. ஒரு பிரெஞ்சு தூதுக்குழு 1905இல் மொராக்கோவின் ஃபெஸ் (Fez) நகரை வந்தடைந்து அதை பிரான்சின் பாதுகாப்பிற்குட்பட்ட (Protectorate) பகுதியாகவே கருதி செயல்பட்டது. இதற்கு ஜெர்மனி தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. இந்த சர்ச்சையை ஐரோப்பிய மாநாடு ஒன்றனுக்கு எடுத்துச்செல்ல பிரான்ஸ் உடன்பட்டது. அல்ஜியர்ஸில் நடந்த அம்மாநாட்டில் எந்தப்பலனும் ஏற்படவில்லை. எனினும் பிரிட்டன் ஜெர்மனிக்கு எதிராக பிரான்சை ஆதரித்தமை தெளிவுபட்டது.

#### அகாதிர், 1911

ஓராண்டுக்குள் பிரான்ஸ் மீண்டும் மொராக்கோவில் சுறுசுறுப்பாக செயல்படத் துவங்கியது. இம்முறை ஜெர்மானியர்கள் மொராக்கோவின் துறைமுகமான அகாதிருக்கு தங்களின் துப்பாக்கி பொருத்திய படகான பேந்தரை அனுப்பி அவர்களுக்கு அப்பகுதியில் இருந்த ஆர்வத்தை தெளிவுபடுத்தினார்கள். பிரிட்டனிடம் இருந்து வரவிருந்த அச்சுறுத்தல்களை கருத்தில் கொண்டு இப்பிரச்சனையை மேற்கொண்டு வளர்க்க ஜெர்மனி விரும்பவில்லை. எனினும் பிரான்ஸ் மொராக்கோவில் தனது நிலையை தக்கவைத்துக் கொள்வதற்காக மேற்கு ஆப்பிரிக்காவில் ஜெர்மனிக்கு தாராளமானப் பல சலுகைகளைக் கொடுத்தது.

#### போஸ்னிய சிக்கல்

ஆஸ்திரிய–ஹங்கேரி அதுவரை ஆஸ்திரியாவின் பாதுகாப்பில் இருந்த போஸ்னியாவையும் (செர்பிய மக்களை உள்ளடக்கியது), ஹெர்ஸிகோவினாவையும் 1908இல் திடீரென இணைப்பதாக அறிவித்ததினால் தொடர் சிக்கல்கள் தோன்றின. ரஷ்யப் போர்க்கப்பல்கள் பாஸ்போரஸ் மற்றும் டார்டெனெல்ஸ் பகுதிகள் வழியாக மத்தியதரைக்கடலுக்கு தடையின்றிச்செல்ல கடற்பாதை ஏற்படுத்திக் கொள்வதற்காக அந்நாடு மேற்கொண்ட உத்தியே இந்நகர்வாகும். இதனால் துருக்கியர்கள் சினமடைந்தாலும் அவர்கள் செய்வதறியாதிருந்தார்கள். கொந்தளிப்பிற்குள்ளான செர்பியா, ரஷ்யாவிடம் உதவிகோரியது. ஆனால் ஜப்பானுடன் நடத்தியப் போரின் பாதிப்புகளில் இருந்து மீளமுடியாமல் இருந்த ரஷ்யா தான் ஆஸ்திரிய–ஹங்கேரியை எதிர்த்தால் ஜெர்மனியின் கோபத்திற்கு உள்ளாக நேரிடும் என்பதால் இதில் தலையிட விரும்பாமல் இருந்தது. ஆகவே செர்பியாவும், ரஷ்யாவும் தங்களுக்கு அனுகூலமான நேரத்தை எதிர்நோக்கி காத்திருக்கும்படி ஆயிற்று.

#### பால்கன் போர்கள்

பதினெட்டாம் நூற்றாண்டின் முற்பாதியில் துருக்கி தென்மேற்கு ஐரோப்பாவில் சக்திவாய்ந்த ஒரு நாடாகத் திகழ்ந்தது. அதன் இராஜ்ஜியம் பால்கன் பகுதிகளில் விரிந்து ஹங்கேரி முதல் போலந்து வரை சென்றது (பால்கன் பகுதி என்பது மத்தியதரைக்கடல் மற்றும் கருங்கடலுக்கு இடைப்பட்ட தென்கிழக்கு ஐரோப்பியப் பகுதியாகும்). பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் துருக்கி எதிர்கொண்ட அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்றத்தன்மை கிரீஸ் துவங்கி பல நாட்டினரும் துருக்கியின் கட்டுப்பாட்டை உடைத்து அந்நாட்டின் பகுதிகளைப் பிரித்தெடுக்க வழிசெய்தது.

#### முதலாம் பால்கன் போர்

மாசிடோனியாவை ஆக்கிரமிப்பதற்காக ரஷ்யா, கிரீஸ், செர்பியா, பல்கேரியா, சிறிதுகாலத்திற்குப்பின் மான்டிநீக்ரோ ஆகிய நாடுகள் 1912ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் உருவாக்கியதே பால்கன் ஐக்கியமாகும் (Balkan League). மாசிடோனியாவின் மக்கள் பல்வேறு இனப் பின்புலத்தை கொண்டவர்களாக விளங்கினர். போர் அக்டோபர் 1912இல் துவங்கி இரண்டே மாதத்திற்குள்ளாகவே துருக்கியர்களின் எதிர்ப்பை முறித்தது. ஐரோப்பிய மாகாணங்களிலிருந்து துருக்கியர்கள் விரட்டியடிக்கப்பட்டார்கள். ஆனால் பிரச்சனை வென்றெடுத்த பிரதேசங்களை பிரித்துக்கொள்ளும்போது ஏற்பட்டது. இறுதியாக மே 1913இல் கையெழுத்திடப்பட்ட லண்டன் உடன்படிக்கையின்கீழ் மாசிடோனியா பிரிக்கப்பட்டு அல்பேனியா என்ற புதிய நாடு உருவாக்கப்பட்டது.

#### இரண்டாம் பால்கன் போர்

வெற்றிபெற்ற நாடுகள் மாசிடோனியாவை பிரிக்கும் முடிவில் சண்டையிட்டுக் கொண்டன. பல்கேரியர்கள் தங்களின் கூட்டு நாடுகளான செர்பியாவையும், கிரீசையும் தாக்கினாலும் தோல்வியே கிடைத்தது. துருக்கியர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தாங்கள் இழந்திருந்த ஏட்ரியநோப்பிளை மீண்டும் எடுத்துக்கொள்ள முனைந்தார்கள். இரண்டாம் பால்கன் போர் ஆகஸ்ட் 1913இல் புக்காரெஸ்ட் உடன்படிக்கையை கையெழுத்திட்டதோடு முடிவுக்கு வந்தது.



12th_History_TM_Unit_13_V2.indd 228 1/6/2022 1:53:45 AM

பால்கன் சிக்கலிலிருந்து இரண்டு கூறுகள் வெளிவருகின்றன. முதலாவதாக பல்கேரியர்கள் தாங்கள் வஞ்சிக்கப்பட்டதாக உணர்ந்து அதற்காக செர்பியர்களை பழிவாங்க துடித்தனர். இரண்டாவதாக செர்பியர்கள் மிதமிஞ்சிய வெற்றிக்களிப்பில் திளைத்தார்கள். இக்காலம் முதற்கொண்டு ஆஸ்திரியர்களுக்கு எதிரான போராட்டங்கள் செர்பியாவிலும், அதன் அண்டை நாடான போஸ்னியாவிலும் மிகுந்த தீவிரவாதத்தன்மை கொண்டதாக மாறியது.

### உடனடிக் காரணங்கள்


ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட்

பால்கன் சம்பவங்களின் உச்சகட்டம் போஸ்னியாவின் செராஜிவோவில் நிகழ்ந்தது. ஆஸ்திரிய–ஹங்கேரியின் பேரரசர் ஃபிரான்ஸ் ஜோசப்பின் (Franz Joseph) வாரிசும், ஆர்ச்டியூக் அந்தஸ்தில் இருந்தவருமான ஃபிரான்ஸ் ஃபெர்டினான்ட் (Franz Ferdinand) 1914 ஜுன் 28 அன்று போஸ்னியாவில் மாணவராக இருந்த செர்பிய நாட்டைச் சேர்ந்த பிரின்சிப் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை செர்பிய நாட்டின் தூண்டுதலினால்தான் நடந்ததாக ஆஸ்திரியா குற்றம்சாட்டியது. ஒரு மாதகாலத்தில் இறுதியறிக்கை (ultimatum) ஒன்றினை பெல்கிரேடுக்கு அளித்து அதனை நிபந்தனையில்லாமல் சரணடைய ஆஸ்திரியா வலியுறுத்தியது. செர்பியா கொடுத்த விளக்கத்தையும், மத்தியஸ்தம் புரிய ஜெர்மனி மேற்கொண்ட முயற்சிகளையும் ஆஸ்திரியா புறந்தள்ளியது. பிரிட்டன் போரை பரவாமல் ஒடுங்க செய்ய முயன்றது. ஆஸ்திரியா ஜூலை 28 அன்று செர்பியா மீது போர்ப்பிரகடனம் செய்து பெல்கிரேடை குண்டுவீசித் தாக்கியது. செர்பியாவிற்கு ஆதரவாக ரஷ்யா படைகளைத் திரட்டி குறுக்கிடக் கருதினாலும் அதற்கு முன்பு ஜெர்மனி தனது தாக்குதலைத் தொடுத்தது. அது ஆகஸ்ட் 1 அன்று ரஷ்யா மீதும், அதன் நட்பு நாடான பிரான்ஸ் மீதும் போரை பிரகடனம் செயதது.

போரில் நேரடியாகப் பங்கெடுக்க பிரிட்டன் தயக்கம் காட்டியது. ஆனால் ஆகஸ்ட் 3 அன்று பிரிட்டிஷாரின் உதவியை நாடி பெல்ஜிய மன்னரிடத்திலிருந்து கோரிக்கை ஒன்று வந்தது. பெல்ஜியம் எந்த கூட்டு நாடுகளுக்கும் ஆதரவு நல்காமல் தனித்திருந்து வந்த நாடாகும். ஆயினும் அதனை ஜெர்மனி தாக்கியது. பெல்ஜியத்தின் நடுநிலையை ஜெர்மனி கலைத்தமை தீவிரக் கண்ணோட்டத்திற்கு உட்படுத்தப்பட்டது. பிரிட்டன் ஆண்டாண்டுகளாக கடைபிடித்துவரும் கொள்கையில் பெரும் சக்திகள் எவையும் பெல்ஜியத்தின் கடற்கரையை தனது பாதுகாப்பிற்கு எதிராக பயன்படுத்திவிடக்கூடாது என்பதும் அதற்கு முக்கியமானதாகும். இத்தேசிய பாதுகாப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பிரிட்டன் ஜெர்மனியை எதிர்த்துப் போரிட முடிவெடுத்தது. இதையடுத்து ஆகஸ்ட் 3 அன்று ஜெர்மனியை உடனடியாக பெல்ஜிய மண்ணைவிட்டு வெளியேறக் கூறி இறுதியறிக்கை ஒன்றை பிரிட்டன் அனுப்பியது. பிரிட்டனும், ஜெர்மனியும் ஆகஸ்ட் 4 முதல் போரை துவங்கின.

### இ) போரின் போக்கு

### போர் பரவுதல்

போரில் பிரிட்டன் இறங்கியதிலிருந்து மிக குறுகிய காலத்தில் பிற நாடுகளும் சண்டையிடத் தயாராகிவந்தன. செர்பியாவுக்கு ஆதரவாக ஆகஸ்ட் 7 அன்று மான்டிநீக்ரோ களமிறங்கி ஆஸ்திரியாவை எதிர்த்தது. இரண்டு வாரங்களில் தூரக்கிழக்கு பிரதேசங்களிலிருந்த ஜெர்மனியின் பகுதிகளை ஆக்கிரமிக்கும் நோக்கோடு ஜப்பான் ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தது. அக்டோபர் மாதத்தில் கருங்கடலில் இருந்த ரஷ்யாவின் துறைமுகங்கள் மீது துருக்கி குண்டுகளை வீசியது. முக்கூட்டு நாடுகள் (Triple Entente Powers), ஆஸ்திரிய மற்றும் துருக்கியப் பகுதிகளைக் கொடுக்க வாக்களித்தமையால் மே 1915 வரை நடுநிலைவகித்த இத்தாலியும் போரில் இறங்கியது.

### மைய நாடுகளும் நேச நாடுகளும்


போரில் இறங்கிய நாடுகள் மைய நாடுகள் என்றும் நேச நாடுகள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கப்பட்டன. ஜெர்மனி, ஆஸ்திரிய–ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா ஆகிய நாடுகள் மைய நாடுகள் எனப்பட்டன.

K39AW

மைய நாடுகளை எதிர்த்த ஒன்பது நாடுகளாவன ரஷ்யா, பிரான்ஸ், பிரிட்டன், இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடு, பெல்ஜியம், செர்பியா, ருமேனியா, கிரீஸ் ஆகியவைகளாகும். பெருவாரியான அமெரிக்கர்கள் நடுநிலைவகிப்பதையே விரும்பியதால் அமெரிக்க ஐக்கிய நாடு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தார்மீக அளவிலான ஆதரவையும் பொருளுதவியையும் (விலைமதிப்பில்லா) தளவாடங்களையும் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் நல்கியது.



12th_History_TM_Unit_13_V2.indd 229 1/6/2022 1:53:45 AM






12th_History_TM_Unit_13_V2.indd 230
1/6/2022 1:53:48 AM

### எல்லைகளில் நிகழ்ந்த போர்கள்

### மேற்கு திசை, 1914

தாங்கள் நடுநிலைவகித்தும் தங்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு ஜெர்மானியர்களுக்கு முறைமையான கண்டனத்தைப் பதிவுசெய்ததைத் தவிர்த்து பெல்ஜிய நாட்டால் வேறெதுவும் செய்யமுடியவில்லை. இதனால் முன்னேறி வரும் ஜெர்மானியப் படைகளை தடுத்து நிறுத்தும் சுமைகலந்தப் பொறுப்பானது பிரான்ஸ் நாட்டின் மீது விழுந்தது. பிரான்சால் பெருமளவில் படையெடுத்து வந்து கொண்டிருந்தவர்களைத் தடுத்துநிறுத்த முடியவில்லை. ஜெர்மன் படைகளின் முதல் பிரிவு பாரிஸ் நகரிலிருந்து இருபது மைல்கள் தொலைவு வரை நெருங்கி வந்தது. பயங்கொண்ட பிரெஞ்சு அரசு போர்டியாக்ஸ் (Bordeaux) நகருக்குப் புலம்பெயர்ந்தது.

### கிழக்கு திசை, 1914

கிழக்கு திசையில் ரஷ்யப்படைகள் பிரஷ்யாவின் கிழக்குப்பகுதி வரை ஊடுருவிச் சென்றன. டானென்பர்க் போரில் வான் ஹிண்டன்பர்க்கின் போர்த்திறத்தால் ரஷ்யா பேரிழப்புகளைச் சந்தித்தது. பின்னர் ஜெர்மானிய ஜெனரல் ஹிண்டன்பர்க் ரஷ்யர்களின் போலந்தை தாக்கப்படையெடுத்துச் சென்றார். இரு திசைகளிலும் பொறியில் சிக்கியது போன்ற நிலையிலிருந்த ஜெர்மனிக்கு கிழக்கில் தனது வெற்றிகள் யாவையும் ஒருங்கிணைத்துக் கொண்டு செல்லுமளவிற்குப் போதுமான பொருள்வளம் இருக்கவில்லை.

கிழக்குப்புறத்தில் நடந்த சண்டைகளில் நேச நாடுகளுக்குப் பேரழிவு ஏற்பட்டாலும் அது எதிரிகளின் கவனத்தை திசைதிருப்பவும், பிரான்ஸ் நாடு எதிர்கொண்ட அழுத்தத்தில் இருந்து அதனை விடுவிக்கவும் வாய்ப்பினை ஏற்படுத்தியது. மார்னே (Marne) போரில் (1914 செப்டம்பர் 6–13) பிரான்ஸ் முன்னேறிவந்த ஜெர்மனியின் படைகளை வெற்றிகரமாக தடுத்து நிறுத்தியது. ஜெர்மானியர்கள் செப்டம்பர் 13 அன்று ஏறக்குறைய ஐம்பது மைல் தொலைவிற்கு புறந்தள்ளப்பட்டிருந்தார்கள். இவ்வாறு பாரிஸ் நகர் காக்கப்பட்டது.

### ஜெர்மானிய காலனிகள் தாக்கப்படல்

கடலில் பிரிட்டன் கொண்டிருந்த கட்டுப்பாடு ஜெர்மனியை அதன் காலனிய நாடுகளுக்கு அவசரகால உதவிகள் எதையும் எடுத்து செல்லமுடியாதபடி செய்தது. அதனால் ஜெர்மானிய கிழக்கு ஆப்பிரிக்கா நீங்கலாக பிறபகுதிகள் போர் துவங்கிய சில மாதங்களிலேயே ஆக்கிரமிக்கப்பட்டிருந்தன.

### மேற்கு திசை, 1915

பிரான்சை நிர்மூலமாக்க ஜெர்மனி எடுத்த முதல் முயற்சி தோற்றதும், மேற்கு திசையிலிருந்த எதிர் படைகள் ஆங்கில கால்வாய் முதல் சுவிட்சர்லாந்து வரையான 650 கிலோமீட்டர் தூரத்திற்கு குழிதோண்டி அகழிப் போர்முறையைக் கைக்கொண்டது, முள்வேலியின் பின்னிருந்து இருதரப்பும் எந்திரத் துப்பாக்கிகளையும் பீரங்கிகளையும் கொண்டு தாக்கிக் கொண்டே நான்கு ஆண்டுகள் 'முற்றுகைப் போரை' (War of Attrition) நடத்தின.

**அகழிப் போர்முறை:** தோட்டாக்களும், குண்டுகளும் பறந்து கொண்டேயிருந்த போர்க்களங்களை உள்ளடக்கிய முதல் உலகப்போர் எழுப்பிய ஆபத்தான சூழல் வீரர்களைத் தங்கள் உடலையும், உயிரையும் பாதுகாக்கும் பொருட்டு நிலத்தைத்தோண்டி அதனுள் அடைக்கலம் தேட வைத்தது. துருப்புகளால் தோண்டப்பட்ட அகழிகளோ, குழிகளோ அவர்களை குண்டுகள் வெளியிட்ட தீயிலிருந்து பாதுகாக்க உதவின. ஜெர்மானியர்கள் தங்கள் காலாட்படைப் பிரிவிற்கு நன்றாகத் தோண்டப்பட்ட அகழிகளையும், அதில் மின்சாரம் மற்றும் படுக்கை வசதிகளையும் செய்து கொடுத்தது. உலகப்போரை அடையாளப்படுத்தும் அகழி முறையானது இரண்டு முதல் நான்கு அகழிகள் ஒன்றனுக்கு இணையாக மற்றொன்று செல்வதேயாகும். ஒவ்வொரு அகழியையும் எதிரிகள் சுட்டாலும் சில அடிகளுக்கு மேல் தோட்டா செல்லமுடியாதபடி நேர்கோட்டில் இல்லாமல் வளைந்துநெளிந்து வடிவமைத்திருந்தனர். அகழிகளின் முக்கிய வரிசைகள் ஒன்றோடு ஒன்று இணைக்கப்படவும், பின்புறத்தில் தொடர் இணைப்பு அகழிகளும் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாக உணவு, வெடிபொருள்கள், புதிய துருப்புகள், கடிதங்கள், ஆணைகள் போன்றவை பரிமாற்றம் செய்யப்பட்டன.

### சோம் (Somme) மற்றும் வெர்டூனில் (Verdun) நடந்த போர்கள், 1916

நீண்டகாலம் பெரிய அளவில் நடத்திச் செல்லப்படும் போர் பிரெஞ்சுக்காரர்களின் மனவுறுதியை குலைத்துவிடும் என்று ஜெர்மானியர்கள் கருதினார்கள். அதனால் புகழ்பெற்ற படையரணாக விளங்கிய வெர்டூனை 1916ஆம் ஆண்டின் பிப்ரவரி முதல் ஜூலை வரையான காலத்தில் அவர்கள் தாக்கினார்கள். இருதரப்பிலும் இழப்புகள் கடுமையாக இருந்தன. பிரான்சின் முக்கியப் பகுதி தாக்கப்பட்டபோது



12th_History_TM_Unit_13_V2.indd 231 1/6/2022 1:53:48 AM

அதன் முக்கிய பாரம் பிரிட்டன் மீது விழுந்தது. ஜெர்மானியர்களுக்கு எதிரான பிரிட்டிஷாரின் தாக்குதல் சோம் நதிக்கரையில் நடந்தது. இரண்டு மில்லியன் மக்கள் கலந்துகொண்ட வெர்டூன் போரும், அதன்பின் நடந்த சோம் போருமே நேச நாடுகளின் பக்கமாக அதிர்ஷ்டத்தைத் திருப்பின.

### ஜட்லாந்து, 1916

மிக முக்கியத்துவம் வாய்ந்த கடற்போர் மே 1916இல் டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்திற்கு அருகில் நடந்தது. இப்போர் முடிவுபடாத ஒரு போராக இருந்தது. ஜட்லாந்து போர் முதல் உலகப்போரின் மிகப் பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது. கடற்படைப் போர்கள் ஜெர்மானிய அரசு நீர்மூழ்கி கப்பல்களுக்கு தடையேற்படுத்தும் (Blockade) நோக்கம் கொண்ட நேச நாடுகளின் கப்பல்களைத் தடையில்லாமல் தாக்க அதிகாரம் வழங்கியபின் நின்றுபோனது.

**Qகப்பல்களும்Uபடகுகளும்:** முதல்உலகப்போரின் காலத்தில் ஜெர்மனி கொண்டிருந்த மிக அச்சுறுத்தும் ஆயுதம் நீர்மூழ்கிகள் அல்லது U–படகுகளாகும். பிரிட்டனின் கப்பல்கள் அனைத்தையும் மூழ்கடிக்கும் உத்தியை ஜெர்மானியர்கள் கடைபிடித்தார்கள். ஒரே மாதத்தில் 880,000 டன்கள் கனத்திற்கு கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டிருந்தன. Q–கப்பல்கள் பிரிட்டனின் ஜெர்மனிக்கான பதிலடியாகும். பிரிட்டன் 200க்கும் மேற்பட்ட நீராவி கப்பல்களையும், மீன்பிடி கப்பல்களையும், சரக்கு படகுகளையும் கொண்டு வாணிப நடவடிக்கையை மேற்கொள்வது போன்று ஒரு மாயபிம்பத்தை ஏற்படுத்தி U–படகுகள் விளைவித்த ஆபத்துகளை எதிர்கொண்டது. பிரிட்டன் இக்கப்பல்களின் வாயிலாக ஜெர்மனியை தாக்குதலைத் தூண்டச்செய்து பின் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ஆயுதங்களையும் படைபலத்தையும் கொண்டு பதிலடி கொடுக்கும் உத்தியைக் கையாண்டது.

### கிழக்கு திசையில் போர், 1917


ரஷ்ய சார் மன்னரின் ஆட்சி பிப்ரவரி 1917இல் கவிழ்க்கப்பட்டமை கிழக்குப்புறத்தில் மத்திய சக்திகளுக்குப் பெரும் திருப்புமுனையாக அமைந்து அதன்பின் ஜெர்மனி தனது கவனத்தை மேற்குப்புறமாக குவிக்க வழிவகை செய்தது. அமைதியை விரும்பிய சோவியத் ரஷ்யா (1918 மார்ச் 3) ஜெர்மனியோடு பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கையில் கையெழுத்திட்டது.

**கலிபோலி படையெடுப்பு 1915–16:** டார்டெனெல்ஸ் படையெடுப்பு என்றும் கூறப்படும் இப்படையெடுப்பு தோழமை நாடுகளால் ஐரோப்பாவிலிருந்து ரஷ்யாவிற்கு செல்லும் கடற்வழிப் பாதையைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு நடத்தப்பட்டு தோல்வியில் முடிந்தது. போதுமான உளவு தகவல்களை சேகரிக்காததும் போரிடும் பகுதியின் தன்மையைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாததும் துருக்கியர்களின் கடும் எதிர்ப்பும் ஒருசேர்ந்து படையெடுப்பின் வெற்றியைத் தடுத்தன. தாங்கள் துவங்கிய இடத்திலிருந்து சிறிதளவே முன்னேறி கடும் சேதங்களை சந்தித்தும் அக்டோபர் மாதத்தின் பாதி வரை தோழமை நாடுகள் தவித்துக் கொண்டிருந்தன.

**காம்ப்ராய் போர் (Battle of Cambrai):** (நவம்பர்–டிசம்பர் 1917) பிரிட்டிஷாரால் அதிகஅளவில் டாங்கி வகை பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டமை பிரான்சின் காம்ப்ராயில் நடந்தப் போரிலாகும். திடீரென 340 டாங்கிகள் போர்முனையில் தோன்றியதும் ஜெர்மானியர்கள் பெரும் திகைப்பிற்கு உள்ளானார்கள்.

### போரில் அமெரிக்காவின் நுழைவு

நீர்மூழ்கிகளின் படையெடுப்பு உக்கிரமானபோது அமெரிக்கர்கள் போரில் நுழைந்தார்கள். பிரிட்டிஷாரின் லைனர் வகை கப்பலான லூசிடானியா (Lusitania) மே 1915இல் ஜெர்மானிய நீர்மூழ்கி கப்பலால் மூழ்கடிக்கப்பட்டபோது அதிலிருந்த 128 அமெரிக்கர்கள் மாண்டனர். ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்கு நடுநிலைவகித்து சமாளித்துக் கொண்டிருந்த குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சன் இறுதியாக அமெரிக்க மக்கள் கொடுத்த அழுத்தத்திற்கு இணங்கி ஏப்ரல் 1917இல் ஜெர்மனி மீது போர்ப்பிரகடனம் செய்தார். தனது அளவிடமுடியாத வளங்களோடு அமெரிக்காப் போரில் இறங்கியது நேச நாடுகளின் வெற்றியை முன்பே உறுதி செய்தது போலாயிற்று.



லூசிடானியா



12th_History_TM_Unit_13_V2.indd 232
1/6/2022 1:53:48 AM

### நட்பு நாடுகளால் ஜெர்மனி கைவிடப்படல்

மன்னர் பிரான்சிஸ் ஜோசப்பை தொடர்ந்து அரியணை ஏறிய பேரரசர் சார்லஸ் 1918 நவம்பர் 3 அன்று கையெழுத்திட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் ஆஸ்திரியாவை அதிகாரமட்டத்தில் இருந்து வெளியேற்றியது. போர் நிறைவுபெற ஒரு சில வாரங்களே இருந்த சூழலில், ஜெர்மனியின் நட்பு நாடுகளனைத்தும் அதனைக் கைவிட்டு விலகின. முதலில் சரணடைய முன் வந்த நாடு பல்கேரியாவாகும். துருக்கியர்கள் போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திடவே விரும்பினர். ஜெர்மனி இயலவே இயலாத விஷயமான தனித்தநிலையில் போரை முன்னெடுத்துச்செல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டது. அதன் துருப்புகளின் மனவுறுதி மிகவும் சரிவுற்றிருந்தது. தோழமை நாடுகள் ஏற்படுத்தியிருந்த தடுப்பரண்கள் ஜெர்மானிய மக்களுக்கு பெரும் சிரமங்களைக் கொடுத்தன. கெய்சர் அரியணையைத் துறந்து ஹாலந்திற்கு ஓட்டம் பிடித்தார். இதற்கிடையே சோஷலிச கட்சியின் தலைவரான ஃபிரெடிரிக் எபர்ட் (Fredrich Ebert) ரெய்க்ஸ்டாகில் (Reichstag) தற்காலிக அரசின் தலைமையை ஏற்று போர்நிறுத்த ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட பேச்சுவார்த்தையைத் துவங்கினார். ஜெர்மனி நவம்பர் 11 அன்று சரணடைவதாக கையெழுத்திட்டது.

### (ஈ) பாரிஸ் அமைதி மாநாடு



பாரிஸ் அமைதி மாநாடு

அமைதி மாநாடு ஜனவரி 1919இல் பாரிசில் துவங்கியது. நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் உட்ரோ வில்சன் (அமெரிக்க ஐக்கிய நாடு), லாய்ட் ஜார்ஜ் (இங்கிலாந்தின் பிரதம அமைச்சர்), மற்றும் ஜார்ஜஸ் கிளெமென்ஸ் (பிரான்சின் பிரதம அமைச்சர்) ஆகியோர் முக்கியப் பங்காற்றினர். உட்ரோ வில்சனின் 14 சரத்து திட்டமே அமைதி பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அமைந்தது.

மற்றொரு போருக்கான அச்சுறுத்தும் சூழல் எழுந்ததால் ஜெர்மன் அரசு இச்சரத்துக்களை ஏற்றுக்கொள்ள கட்டாயப்படுத்தப்பட்டது. அமைதி உடன்படிக்கை 1919 ஜூன் 28 அன்று வெர்செய்ல்சில் உள்ள கண்ணாடி மாளிகையில் (Hall of Mirrors) கையெழுத்திடப்பட்டது.

**குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சனின் முன்மொழிவு உள்ளடக்கியவைகளாவது:**
1. திறந்த உடன்படிக்கைகள் வெளிப்படையாகவே உருவாக்கப்படுதல். 2. கட்டுப்பாடுகள் யாவும் கடல்வெளியில் தளர்த்தப்படல். 3. நாடுகளுக்கிடையே பொருளாதாரத் தடைகள் அகற்றப்படல். 4. போர்த்தளவாட உற்பத்தி குறைக்கப்படல். 5. காலனி சார்ந்த சிக்கல்களை சம்மந்தப்பட்ட மக்களின் விருப்பமறிந்து பாரபட்சம் காட்டாமல் தீர்விற்கு உட்படுத்தல். 6. ரஷ்யா தனக்கு ஏற்றதாகக்கருதும் எத்தகைய அரசையும் நிறுவ அதற்கு வாய்ப்பளிப்பதோடு அவ்வரசை பிறநாடுகள் ஏற்றுக்கொள்ளவும், ஆதரிக்கவும், வரவேற்கவும் செய்தல். 7. பெல்ஜியத்தை மீண்டும் சுதந்திர நாடாக்குதல். 8. அல்சேசையும், லொரைனையும் பிரான்சிடமே மீண்டும் ஒப்படைத்தல். 9. இத்தாலிய எல்லையை தேசிய அடிப்படையில் மறுநிர்ணயித்தல் 10. தேசிய சுயநிர்ணயம். 11. ருமேனியா, செர்பியா, மான்டிநீக்ரோ ஆகியவை மீண்டும் உருவாக்கப்பட்டு செர்பியாவிற்கு கடலை அடைய வழி ஏற்படுத்தல். 12. துருக்கி மக்களை தன்னாட்சி கொண்ட வளர்ச்சி முறைக்கு கொண்டு செல்வதோடு கருங்கடல் நீர்ச்சந்தியிலிருந்து மத்தியதரைக்கடல் வரை "நிரந்தரமாக திறந்துவிடல்." 13. போலிஷ் மக்களுக்கென்றே சுதந்திரமான போலந்து உருவாக்கப்பட்டு அதற்கு கடல் தொடர்பு ஏற்படுத்துதல். 14. பன்னாட்டு சங்கத்தை ஏற்படுத்தல்.

தனித்தனியான உடன்படிக்கைகள் வரையப்பட்டு அவற்றை நேச நாடுகள் ஆஸ்திரியாவுடனும் (செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை), ஹங்கேரியுடனும் (டிரையனான்), பல்கேரியாவுடனும் (நியூலி), துருக்கியுடனும் (செவ்ரெஸ்) கையெழுத்திட்டுக் கொண்டன. துருக்கியோடு ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை (செவ்ரெஸ் உடன்படிக்கை) சுல்தான் ஏற்றுக்கொண்டாலும், கமால் பாஷாவும், அவரது தொண்டர்களும் அதை எதிர்த்ததால் அது தோற்றது.

### (உ) வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகள்

வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் கூறுகள் சுருக்கமாகக் கீழ்வருமாறு: அல்சேசையும், லொரைனையும் ஜெர்மனி பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும். சார் பள்ளத்தாக்கின் நிலக்கரி சுரங்கங்கள் பிரான்சிடம் வழங்கப்பட வேண்டும். சார் பகுதி 1935 வரை பன்னாட்டு சபையால் நிர்வகிக்கப்பட்டு, அதன்பின் பொது வாக்கெடுப்பின் வாயிலாக அப்பகுதி தொடர்ந்து பன்னாட்டு சபையால்

நிர்வகிக்கப்படுவதா அல்லது ஜெர்மனியிடம் திரும்ப ஒப்படைக்கப்படுவதா அல்லது பிரான்சுக்கு பரிசளிப்பதா என்று முடிவெடுக்கப்பட வேண்டும். ரஷ்யா, ஆஸ்திரியா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குள் பிரிந்து கிடந்த போலந்து மாகாணங்களை ஒன்றிணைத்து பால்டிக் கடல்வெளிக்கு ஜெர்மானிய துறைமுகமான டான்சிக்கை (Danzig) உள்ளடக்கிப் பாதையமைத்து, அதனை பன்னாட்டு சபையின் அரசியல் கட்டுப்பாட்டில் விடுக்கவேண்டும். உரிமைகள், பட்டங்கள், கடல்வெளியில் ஜெர்மனி வைத்திருந்த பகுதிகள் யாவையும் தோழமை நாடுகளுக்கு விட்டுக்கொடுக்கக் கட்டாயப்படுத்தப்பட்டது. ஜெர்மானிய காலனிகள் யாவும் பன்னாட்டு சபையின் கட்டாயத்திற்குள் கொண்டுவரப்பட வேண்டும்.

பிரான்ஸ் மீதும், பெல்ஜியம் மீதும் புதிய தாக்குதலைத் தவிர்க்கும் பொருட்டு ரைன் பள்ளத்தாக்கில் அரண் அமைக்கவோ, படைகளைக் குவிக்கவோ ஜெர்மனிக்கு தடைவிதிக்கப்பட்டது. தோழமை நாடுகள் ரைன்லாந்தை ஆக்கிரமிக்க முடிவுசெய்யப்பட்டது. ரைன் நதியின் கிழக்குக்கரைப்பகுதிகள் இராணுவக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுவிக்கப்படுவதென்றானது. கிழக்கு ஐரோப்பாவில் பிரெஸ்ட்-லிடோவ்ஸ்க் உடன்படிக்கையின்கீழ் ரஷ்யா ஜெர்மனிக்கு விட்டுக்கொடுத்த மாகாணங்களான பின்லாந்து, எஸ்டோனியா, லாட்வியா, லிதுவேனியா ஆகியவற்றை சுதந்திர குடியரசுகளாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டது. ஏறக்குறைய ஒரு நூற்றாண்டு காலத்திற்கு தனது இருப்பை இழந்திருந்த போலந்து பல போலிஷ் மாகாணங்களை இணைத்ததின் வாயிலாகப் புத்துயிர் பெற்றது.

ஜெர்மனி நிராயுதபாணியாக்கப்பட்டு அதன் நீர்மூழ்கிக் கப்பல்களையும், போர்க்கப்பல்களையும் இழக்கச் செய்யப்பட்டது. இராணுவப் பயன்பாட்டிற்காகவோ, கப்பற்படையின் தேவைக்கென்றோ ஜெர்மனி விமானங்களைக் கொண்டிருக்கக்கூடாது என்றதோடு அதன் தரைப்படை அதிகாரிகளையும், பிறப் பணியாளர்களையும் சேர்த்து 100,000 என்ற எண்ணிக்கையைத் தாண்டக்கூடாதென்றும் வரையறுக்கப்பட்டது. ஜெர்மனியும், ஆஸ்திரியாவும் ஐக்கியமாதல் தவிர்க்கப்பட்டு ஜெர்மனி ஆஸ்திரியாவின் சுதந்திரத்தை அங்கீகரிக்க வற்புறுத்தப்பட்டது.

ஜெர்மனியும் அதன் கூட்டு நாடுகளுமே போரில் விளைந்த இழப்புகளுக்கும், சேதங்களுக்கும் பொறுப்பெனக் கொள்ளப்பட்டது. போர் சேதங்கள் 1921இல் கணக்கிடப்பட்டு 33 பில்லியன் டாலர்கள் என மதிப்பிடப்பட்டது.

ஜெர்மானியப் பேரரசர் இரண்டாம் வில்லியம் மீது நன்னடத்தையை மீறியமை, ஒப்பந்தங்களின் புனிதத்தன்மையை மதிக்கத் தவறியமை போன்ற உச்சபட்ச குற்றங்கள் சுமத்தப்பட்டது. அவரை ஒரு தீர்ப்பாயத்தின் மூலம் விசாரிக்க முடிவுசெய்யப்பட்டது. ஆனால் நெதர்லாந்து அரசு பேரரசரை ஒப்படைக்க மறுத்துவிட்டதால் விசாரணை நடத்த எடுக்கப்பட்ட முடிவு கைவிடப்பட்டது.

## 13.4 ரஷ்யப் புரட்சியும் அதன் பாதிப்புகளும்

### அறிமுகம்

முதல் உலகப்போரின் மிக முக்கிய விளைவு ரஷ்யப் புரட்சியாகும். ரஷ்ய சார் மன்னரின் அரசு முதல் உலகப்போர் ஏற்படுத்திய அழுத்தங்களை தாக்குப்பிடிக்க முடியாமல் திண்டாடியது. மக்கள் உணவின்றி தவித்தனர். நகரங்களும், சிற்றூர்களும் தொழிலாளர்களால் நிறைந்து வழிந்தபோது அவர்களுக்கு இருக்க இடமோ, உண்ண உணவோ வழங்க யாருமில்லாதநிலை உருவானது. முதல் புரட்சி (பிப்ரவரி புரட்சி) 1917ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் பெட்ரோகிரேட் நகரில் வேலைநிறுத்தங்களோடும், ஆர்ப்பாட்டங்களோடும் நடைபெற்றது. ஆனால் முதல் புரட்சி ரஷ்யாவின் எந்த ஒரு பிரச்சனையையும் தீர்க்கவில்லை. ரஷ்ய முடியாட்சி தூக்கியெறியப்பட்டாலும் இடைக்கால அரசு போரைத் தொடர்ந்து நடத்தவே செய்தது. இதனால் நவம்பர் மாதத்தில் இரண்டாவது பெரும் புரட்சி (அக்டோபர் புரட்சி) நடந்தேறி லெனின் தலைமையிலான போல்ஷ்விக் அமைப்பு அதிகாரத்தைக் கைப்பற்றி ரஷ்யாவில் பொதுவுடைமை அரசை நிறுவியது.



பிப்ரவரி புரட்சி



12th_History_TM_Unit_13_V2.indd 234 1/6/2022 1:53:49 AM

### அ) புரட்சியின் காரணிகள்

### சார்களின் சர்வாதிகார ஆட்சி

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ரஷ்யா தொடர்ச்சியாக சில சர்வாதிகார சார் மன்னர்களின் ஆட்சிக்குட்பட்டு பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. ரஷ்யப் பொருளாதாரமும், சமூகமும் இவர்களின் ஆட்சியின்கீழ் தேங்கி வளர்ச்சியடையாமலிருந்தன. அடிமை வர்க்கத்தினர் ஒடுக்கப்பட்டு வருந்தத்தக்க வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர். யூத–ஒடுக்குமுறை உச்சத்திற்கு சென்று யூத மக்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். தங்களின் கசப்புணர்வை பதிவுசெய்ய ஜனநாயக வெளிகள் இல்லாத நிலையிருந்தது. அறிஞர் பெருமக்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மாணவர்கள், விஞ்ஞானிகள் மற்றும் எழுத்தாளர்கள் போன்றோர் தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்தியதற்காக சிறையிலடைக்கப்படவும் நாடுகடத்தப்படவும் இன்னபிற வகையிலும் இன்னல்களுக்கு ஆட்படுத்தப்பட்டார்கள். சார் அரசாட்சியின் வீழ்ச்சியை அனைத்து தரப்பினரும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



லெனின்

**விளாடிமிர் இலிச் லெனின் (1870 – 1924):** லெனின் மத்திய வோல்கா பகுதியில் பிறந்தார். அவரது மூத்த சகோதரர் 1887ஆம் ஆண்டு சார் மன்னரைக் கொல்ல முயன்ற குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார். கார்ல் மார்க்சின் சிந்தனைகளால் உந்தப்பட்ட லெனின் வெகுஜன நடவடிக்கையின் மூலமாகவே விடுதலை அடையமுடியும் என்று நம்பினார். அவர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் ஆலை ஊழியர்களின் வாசகவட்டத்திற்கு மார்க்சியம் குறித்து வகுப்புகள் எடுத்து காலத்தை செலவழித்துக் கொண்டிருந்தார். அவர் 1895இல் கைதுசெய்யப்பட்டு சைபீரியாவில் சிறைவைக்கப்பட்டார். பின்னர் 1900இல் விடுவிக்கப்பட்ட அவர் ஐரோப்பாவின் பெரு நகரங்களில் ஒரு விடுதியிலிருந்து மறுவிடுதிக்கென்று புலம்பெயர்ந்து கொண்டேயிருந்தார். இடதுசாரிகளில் இருந்து காங்கிரசிற்கு தேர்வு செய்யப்பட்ட 43 உறுப்பினர்களைக் கொண்ட முக்கிய கட்சியான சமூக ஜனநாயக கட்சி 1903இல் லண்டனுக்கு புலம்பெயர்ந்தது. அங்கு அமைப்பு, உத்தி போன்ற பிரச்சனைகளை முன்னிறுத்தி காங்கிரஸ் பிளவுபட்டது. போல்ஷ்விக் என்னும் ஒரு சிறு பெரும்பான்மையினை (போல்ஷின்ஸ்ட்வோ) லெனின் ஆதரிக்க அதுவே பின்னர் போல்ஷ்விக் கட்சியாக உருவெடுத்தது. சிறுபான்மையாக இருந்த அவரது எதிரணியினர் மென்ஷ்விக்குகள் என்றழைக்கப்பட்டார்கள்.

### வேளாண்குடிகளின் நிலை

ரஷ்ய சமூகம் விவசாயத்தைப் பின்புலமாக கொண்டதாகும். ஏறக்குறைய மக்கள் தொகையின் சரிபாதி நிலத்தோடு பிணைக்கப்பட்ட அடிமைகளாகவே விளங்கினார்கள் ரஷ்ய விவசாயிகள் வாரத்தில் ஒருசில நாட்களாவது அங்கிருந்த நிலக்கிழார்களின் நிலத்தில் கூலியின்றி வேலை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டும், அவர்களின் அனுமதியைப் பெற்ற பின்பே திருமணஉறவை ஏற்படுத்திக் கொள்ளவும் நிர்பந்திக்கப்பட்டனர். சிறு குற்றங்களுக்காக அடிமைகள் கடுந்தண்டனைகளைப் பெற்றார்கள். மன்னர் முதலாம் நிக்கோலஸின் ஆட்சிக்காலத்தில் ரஷ்யாவின் பல்வேறு பகுதிகளில் ஐநூறுக்கும் மேற்பட்ட கலவரங்கள் அடிமைகளால் நடத்தப்பட்டாலும் அவர்கள் கொடூரமான முறையில் நசுக்கப்பட்டார்கள். மன்னர் இரண்டாம் அலெக்ஸாண்டர் 1861இல் விடுதலைஆணை ஒன்றைப் பிறப்பித்து அவர்கள் யாவரையும் அடிமைநிலையிலிருந்து விடுவித்தார். ஆனால் அவர்கள் மேற்கொண்டு வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல ஆதாரமாக இருக்கக்கூடிய நிலம் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. இதனால் புரட்சிக்கான எரிபொருளாக விவசாயிகள் விளங்கினார்கள்.

### தொழில்வளர்ச்சி தேக்கமும், பின்தங்கிய சூழலில் தொழிலாளர் வாழ்க்கையும்

ரஷ்யா காலதாமதமாகவே தொழிற்துறையை உருவாக்கியது. இதனால் பிற ஐரோப்பிய நாடுகளைக் காட்டிலும் அது பின்தங்கியேயிருந்தது. ரஷ்ய ஊழியர்கள் ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார்கள். தொழிற்சங்கங்களும், வேலைநிறுத்தங்களும் முற்றிலுமாக தடை செய்யப்பட்டிருந்தன. ரஷ்யாவின் தொழிலாளர் வர்க்கம் தங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்த ஏதாவது ஒரு வாய்ப்பு கிடைக்காதா எனக் காத்திருந்தனர்.

### நிகிலிசவாதிகளின் பங்கு

ரஷ்ய நாட்டை எதிர்த்து இரக்கத்திற்கு சிறிதும் இடங்கொடுக்காமல் போரைத்துவக்கிய இளையோரையும் தீவிரவாத செயல்பாட்டு முறையை ஆதரிப்போரையும் உயர்குடிப்பிறப்பை

சாராதோர்களையும் அவர்களின் எதிரிகள் நிகிலிசவாதிகள் என்று அழைத்தார்கள். மன்னர் இரண்டாம் அலெக்ஸாண்டரை கொலை செய்ய எடுக்கப்பட்ட முதல் முயற்சி தோற்கவும், அதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட எண்ணிலா விசாரணைகளில் சந்தேகத்துக்குரிய இருபால் அறிவார்ந்த மக்களையும் நிகிலிசவாதிகள் என்று புனைந்து அவர்களை சைபீரிய சிறைக்கு அனுப்பியபோதும் புரட்சி நடவடிக்கைகள் ரஷ்யாவில் குறையாமல் தொடர்ந்துகொண்டே இருந்தது. பாதிக்கப்பட்ட சிறுபான்மையினரான யூதர்களும் போலந்து நாட்டு பூர்வகுடியினரும் வந்துசேர துவங்கியதும் புரட்சிப்படையின் எண்ணிக்கை வேகமாகப் பெருகியது.

> பல்லாண்டுகால கட்டியெழுப்புதலின் வடிவமான சமூக அமைப்பை எதிர்க்கும் உணர்வின் பிரதிநிதித்துவமே நிகிலிசமாகும். நிகிலிசம் நாட்டின் அரசு, கிறித்தவ ஆலயம், குடும்பம் போன்ற நிறுவனங்கள் கொண்டிருந்த அதிகாரத்தை மறுத்தது. அதன் நம்பிக்கைகள் விஞ்ஞான அடிப்படையிலான உண்மையைச் சுற்றியே அமைந்திருந்தன.

### மார்க்சியமும் அதன் தாக்கமும்

சோஷலிசப் புரட்சிக்கு, உழைக்கும் மக்கள் (Proletariat) எவ்வாறு அவசியமோ அது போலவே நடுத்தர மக்களின் (Bourgeoisie) இருப்பும் கட்டாய முன்தேவை என மார்க்சும், ஏங்கல்சும் கருதினர். பின்தங்கிய ரஷ்யாவில் ஒரு வெற்றிகரமான சோஷலிசப் புரட்சி ஏற்பட வாய்ப்பிருப்பதாக அவர்கள் கருதவில்லை. எனினும், அரசின்மைவாதம் போன்ற பிற தீவிரவாதப்போக்கு கொண்ட சோஷலிச சிந்தனைகளைவிட ஒடுக்கப்பட்ட வாழ்க்கைச்சூழல் அமையப் பெற்றிருந்தவிடத்தில் மார்க்சியமே செழித்து வளர்ந்தது. அதனால் மார்க்சிய கூட்டமே வலுப்பெற்று முன்னேற பெரும் நிறுவன ஆற்றல் கொண்டிருந்த லெனின் அதன் கவர்ந்திழுக்கும் திறன் பெற்ற தலைவரானார்.

### சார் மன்னர் இரண்டாம் நிக்கோலசின் சர்வாதிகாரம்

ரோமனோவ் வம்சத்தை சேர்ந்த சார் மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் அரசாட்சி அனுபவம் சிறிதும் இல்லாதிருந்தார். அவரது மனைவியான அலெக்ஸாண்ட்ரா ஆதிக்க மனோபாவம் கொண்டவர் என்பதோடு நிக்கோலஸ் அவரின் ஆழ்ந்த தாக்கத்தின் கீழிருந்தார். காலனிய விரிவாக்கப் போட்டியில் விடுபட்டுவிடக்கூடாது என்று கருதிய நிக்கோலஸ் அதற்காக மஞ்சூரியாவிற்குள் நுழையும்பொருட்டு 1904இல் தூண்டியமையே ஜப்பானை எதிர்த்த போராக சென்றுமுடிந்தது. ரஷ்யாவின் தோல்வி அந்நாட்டினுள் வேலை நிறுத்தங்களையும் கலவரங்களையும் உருவாக்கியது. சார் மன்னர் மீதான எதிர்ப்பு வலுத்தது.



இரண்டாம் நிக்கோலஸ்

அருட்தந்தை கேப்பன் 1905 ஜனவரி 23 அன்று பெண்கள், குழந்தைகள் மற்றும் பிற மக்கள் கலந்துகொண்ட ஒரு பேரணியை நடத்தினார். பிரதிநிதித்துவ அடிப்படையிலான தேசிய சட்டமன்றத்தையும், வேளாண் மற்றும் தொழிற்துறை கொள்கைகளில் மாற்றத்தையும் கோரி ஆயுதம் ஏந்தாமல் அமைதியாக ஊர்வலம் நகர்ந்து கொண்டிருந்தது. ஆனால் காவல்துறையினரும், இராணுவவீரர்களும் அவர்களை நோக்கி சுட்டனர். தாக்குதலில் நூற்றுக்கணக்கானோர் செத்துமடிந்தனர்; ஆயிரக்கணக்கானோர் குண்டடிபட்டனர். இச்சம்பவம் (இரத்த ஞாயிறு (Bloody Sunday) என்று பொதுவில் அடையாளப்படுத்தப்பட்ட சம்பவம்) கலவரத்திற்கும் வேலைநிறுத்தங்களுக்கும் கட்டுப்பாடற்ற வன்முறை நிகழ்வுகளுக்கும் வழிவகுத்து மாஸ்கோவின் கவர்னர் ஜெனரல் குண்டுவீசி கொல்லப்படும் வரை நீண்டது.

நிக்கோலஸ் ஒரு அரசியல் சாசனத்தை வழங்கவும் டூமா என்ற பாராளுமன்றத்தை உருவாக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டார். இவற்றால் திருப்தியடையாத இடதுசாரி கட்சியினர் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் நகரில் சோவியத் (council) என்னும் தொழிலாளர் பிரதிநிதி அவையை உருவாக்கினர். இது போன்ற சோவியத்துகள் பிற நகரங்களிலும் உருவாக்கப்பட்டன. டூமா நடுத்தர மக்களுக்காக அரசில் குரல் கொடுத்தது. இதனால் மிதவாதிகள் அரசுக்கு ஆதரவு நல்கினாலும் இடதுசாரிகள் எதிர்ப்பைத் தொடர்ந்தார்கள். ஆனால் டூமா எப்போதெல்லாம் சார் மன்னரின் முடிவுகளை எதிர்த்ததோ அப்போதெல்லாம் அது கலைக்கப்பட்டு மறுதேர்தல் நடத்தப்பட்டது. அரசின் கொள்கைகளில் மாற்றம் காணாமலே நான்காவது டூமா 1917ஆம் ஆண்டின் புரட்சியோடு கலைக்கப்பட்டது.

### சார் மன்னர் எதிர்ப்பும், டூமா கலைப்பும்

பிரான்சோடும் பிரிட்டனோடும் இணைந்து ரஷ்யா செயலாற்றிக் கொண்டிருந்ததால் முதல்



12th_History_TM_Unit_13_V2.indd 236 1/6/2022 1:53:49 AM

உலகப்போரின் துவக்கத்தில் மன்னராட்சி தற்காலிகமாய் பலம் பெற்றிருந்தது. தனது அரண்மனைக்குள் புரட்சி மேற்கொள்ளப்பட்டு மாற்றங்கள் நிகழப்போவதாக கிளம்பிய புரளிகளை நம்பிய மன்னர் நிக்கோலஸ் தானே படைகளின் உச்ச தளபதியாக (Commander–in–Chief) பொறுப்பேற்று நிலைமையை மேலும் குழப்பினார். அரண்மனை நிகழ்வுகளிலும் சார் மன்னர் மீதும் சார் அரசியார் மீதும் செல்வாக்குக் கொண்டிருந்த ரஸ்புட்டின் என்பவர் கொல்லப்பட்டதும் (1916) மேலும் குழப்பங்கள் வலுத்தன. செயின்ட் பீட்டர்ஸ்பர்க் சோவியத்தின் உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

### புகழ்பெற்ற கிளர்ச்சிகள்

சோஷலிஸ்டுகள் 1917 பிப்ரவரி 23 அன்று சர்வதேச உழைக்கும் பெண்கள் தினத்தை அனுசரித்துக் கொண்டிருந்தபோது சார் மன்னர் யாராலும் அசைக்கமுடியாவண்ணம் தம் நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்தார். ஆனால் மார்ச் 2 அன்று அவர் அரியணை இறங்கும் நிலை ஏற்பட்டது. வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு யாரும் அழைப்பு விடுக்கவில்லையென்றபோதும் இராணுவத்தில் பணிபுரியும் கணவர்களைக் கொண்ட பெண் ஜவுளி தொழிலாளர்கள், உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டதால் வேலைநிறுத்தப் போராட்டத்தில் இறங்கவும், ரஷ்யப் பேரரசின் தலைநகரானப் பெட்ரோகிரேட் நகரின் வீதிகளில் பேரணி செல்லவும் சூழ்நிலை அவர்களை உந்தித்தள்ளியது. "பணியாளர்களுக்கு உணவு" என்ற கோரிக்கையை முன்னிறுத்தி தீவிரவாத மனநிலை கொண்ட ஆயிரக்கணக்கான பெண் ஊழியர்கள் வீதிகளில் போராடிக் கொண்டே தொழிற்சாலைப் பணியாளர்களை நோக்கி "வெளியே வாருங்கள்!" "பணிபுரிவதை நிறுத்துங்கள்!" என்று உரத்த குரலெழுப்பினர். இதன் எதிரொலியாக மறுநாள் (பிப்ரவரி 24) நகரின் 400,000 ஊழியர்கள் போராட்டக்களத்தில் இறங்கினர்.

### சார் மன்னர் பதவி இறங்குதல்

அரசு இராணுவத்தைக் கொண்டு வேலைநிறுத்தப் போராட்டத்தை ஒடுக்க முயன்றது. ஆனால் வேலைநிறுத்தப் போராட்டமும், பேரணிகளும் நான்காம் நாளை எட்டியபோது இராணுவப் பணிமனைகளிலும் கலகம் வெடித்தது. சார் மன்னர் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்தினார். ஆனால் அவரது ஆணையை ஒலிபரப்ப ஒருவர்கூடப் பணியில் இல்லாத சூழலில் நகரில் இச்செய்தி பரவவில்லை. சார் மன்னர் பெட்ரோகிரேட் நகருக்குத் திரும்ப முயன்றார். அவர் வந்த புகைவண்டியை இருப்புப்பாதை ஊழியர்கள் வழியிலேயே தடுத்துநிறுத்தினர். இதனால் அச்சங்கொண்ட பெட்ரோகிரேடின் சில இராணுவ தளபதிகளும் பிற தலைவர்களும் சார் மன்னரை பதவிதுறக்க அறிவுறுத்தினர். மக்களின் எழுச்சி நடந்து ஒரு வாரகாலம் சென்றநிலையில் மார்ச் 15 அன்று மன்னர் இரண்டாம் நிக்கோலஸ் பதவி துறந்தார்.

### இடைக்கால அரசு

அரசின் செயல்பாடுகளை எடுத்து நடத்த இரு இணை அமைப்புகள் இருந்தன. முதலாவதானது சொத்துடைமையாளர்களைப் (Propertied Class) பிரதிநிதித்துவப்படுத்தி பழைய அரசின் டூமாவில் அங்கம் வகித்த நடுத்தர வர்க்க அரசியல்வாதிகளைக் கொண்டது. மற்றொன்றானது தொழிலாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிலாளர் குழு அல்லது சோவியத் அமைப்பின் உறுப்பினர்களைக் கொண்டது. சோவியத் உறுப்பினர்கள் தலைமறைவாயிருந்த இடதுசாரிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே செயல்பட்டார்கள். டூமாவில் இருந்தவர்கள் சோவியத்துகளின் ஒப்புதலைப்பெற்று இடைக்கால அரசை நிறுவினார்கள். இம்முடிவில் சோவியத்துக்குள் அதிக எண்ணிக்கையிலிருந்த மென்ஷ்விக்குகளால் கொள்ளப்பட்டதேயன்றி சிறுபான்மை போல்ஷ்விக்குகள் முடிவெடுக்காமலிருந்தார்கள். லெனினின் வரவால் அங்கிருந்த நிலைமை முற்றிலுமாக மாறியது.

### இடைக்கால அரசின் தோல்வி

புரட்சிவெடித்தபோது லெனின் சுவிட்சர்லாந்தில் இருந்தார். தொடர்ந்து போராடுதலையே லெனின் விரும்பினார். "அனைத்து அதிகாரங்களும் சோவியத்துகளுக்கே" என்ற அவரின் தாரகமந்திரம் தொழிலாளர் தலைவர்கள் யாவரையும் அவர் பக்கம் திருப்பியது. போர்க்காலப் பற்றாக்குறைகளால் பாதிக்கப்பட்ட மக்களை 'ரொட்டி, அமைதி, நிலம்' என்ற முழக்கம் ஈர்த்தது.

ஆனால் இடைக்கால அரசு இருபெரும் தவறுகளைப் புரிந்தது. நில மறுவழங்கல் குறித்த கோரிக்கையின் முடிவை அது காலதாமதப்படுத்தியதோடு போரைத் தொடர்ந்து நடத்துவது குறித்த விஷயங்களிலும் இழுத்தடித்தது. ஏமாற்றமடைந்த விவசாய வீரர்கள் தங்களின் பணியை விடுத்து நில ஆக்கிரமிப்பாளர்களோடு சேர்ந்துகொண்டார்கள். இது போல்ஷ்விக்குகள் தலைமையில் பெட்ரோகிரேடில் நடந்து கொண்டிருந்த கிளர்ச்சியைத் தீவிரப்படுத்தியது. அரசு



12th_History_TM_Unit_13_V2.indd 237 1/6/2022 1:53:49 AM


ப்ராவ்தா என்ற செய்தித்தாளை தடைசெய்ததோடு பின்லாந்தில் மறைந்திருந்த லெனின் தவிர பிற போல்ஷ்விக்குகளை கைதுசெய்தது. லியோன் ட்ராட்ஸ்கியும் கைது செய்யப்பட்டார். தாராளவாதிகளும் மிதவாத சோஷலிஸ்டுகளும் ஏற்படுத்திக்கொண்ட கூட்டணியின் பின்புலத்தில் கெரன்ஸ்கி பிரதம அமைச்சரானார். ஆட்சிக்கவிழ்ப்பு முயற்சி ஒன்றை எதிர்கொண்ட கெரன்ஸ்கி அரசையும், சோவியத்துகளையும் ஒடுக்கி நீக்க நினைத்தார். ஆனால் அவரது முயற்சிகள் சோவியத்துகளால், அதிலும் குறிப்பாக மக்களிடையே பிரபலமடைந்து கொண்டிருந்த போல்ஷ்விக்குகளால் முறியடிக்கப்பட்டன

ப்ராவ்தா என்ற ரஷ்ய சொல்லுக்கு "மெய்" என்று பொருள். இதுவே சோவியத் ஐக்கியத்தின் பொதுவுடைமை கட்சிக்குரிய அங்கீகரிக்கப்பட்ட செய்தித்தாளாக 1918 முதல் 1991 வரை இருந்தது.

### லெனின் தலைமையில் போல்ஷ்விக்குகள் பொறுப்பேற்றுக்கொள்ளுதல்

அக்டோபர் மாதத்தில் லெனின் போல்ஷ்விக் மத்தியகுழுவிடம் உடனடியாக ஒரு புரட்சியை நடத்துமாறு அறிவுறுத்தினார். ட்ராட்ஸ்கி முழுமையான செயல்திட்டமொன்றைத் தயாரித்தார். குளிர்கால அரண்மனை, பிரதம அமைச்சரின் தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசின் முக்கியத்துவம் வாய்ந்த கட்டடங்கள் யாவும் நவம்பர் 7 அன்று ஆயுதமேந்திய ஆலை ஊழியர்களாலும், புரட்சிப்படைகளாலும் கைப்பற்றப்பட்டன. புது பொதுவுடைமை அரசு 1917 நவம்பர் 8 அன்று பதவியேற்றது. அதன் தலைவராக லெனின் வீற்றிருந்தார். போல்ஷ்விக் கட்சியின் பெயர் ரஷ்ய கம்யூனிச கட்சி என்று மாற்றப்பட்டது.

### புரட்சியின் விளைவுகள்



பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை

இடைக்கால அரசின் வீழ்ச்சிக்கு மிக முக்கியமான காரணியாக அது உலகப் போரில் இருந்து பின்வாங்காமல் இருந்ததே என லெனின் கருதினார். இதனால் லெனின் உடனடியாக அமைதி ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் இறங்கினார். புது அரசை நிர்மாணிப்பதில் தன் முழுகவனத்தை செலுத்திக் கொண்டிருந்த அவர் மத்திய சக்திகள் விதித்த கடுமையான நெறிமுறைகளை உதாசீனப்படுத்தினார். அதனால், பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை மார்ச் 1918இல் கையொப்பமானது.

### ரஷ்யப் புரட்சி ஏற்படுத்திய பாதிப்புகள்

புரட்சி உலகம் முழுவதிலும் வாழும் மக்களின் நினைவுகளில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. பல்வேறு நாடுகளிலும் பொதுவுடைமை கட்சி உருவாக்கப்பட்டது. சோவியத் ஐக்கியம் காலனி ஆட்சிக்குட்பட்ட நாடுகளை தங்களின் விடுதலைக்காகப் போராட அறிவுறுத்தி அந்நாடுகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்தது. நிலவுடைமை சீர்திருத்தம், சமூகநலன், தொழிலாளர் உரிமைகள், பாலின சமத்துவம் போன்ற முக்கியத்துவம் பெற்ற கூறுகள் உலகம் முழுவதும் விவாதப்பொருளானது.

புரட்சிக்குப்பின் வந்த பத்தாண்டுகளில் அந்நாடு காட்டிய அதிவேக வளர்ச்சி வளர்ந்துவரும் நாடுகளுக்கெல்லாம் உத்வேகமளித்ததோடு, முதலாளித்துவத்திற்கு மாற்றான ஒரு முறையையும் அறிமுகப்படுத்தியது. எழுத்தறிவின்மையும், வறுமையும் மிக குறுகிய காலத்தில் ஒழிக்கப்பட்டன. தொழிற்துறையும், வேளாண்மையும் பாராட்டப்படுமளவிற்கு முன்னேற்றம் காட்டியதோடு பொருளாதாரப் பெருமந்தம் உலகின் பிற பகுதிகளைக் கடுமையாக பாதித்தபோது ஐக்கிய ரஷ்யாவை அது எந்தவகையிலும் பாதிக்கவில்லை. பெண்களுக்கு சமஉரிமை வழங்கப்பட்டது. தொழிற்துறையும், வங்கிகளும் நாட்டுடைமையாக்கப்பட்டன. நிலம் சமூகவுடைமையாகக் கொள்ளப்பட்டு ஏழ்மை நிலையிலிருந்த விவசாயிகளுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

## 13.5 பன்னாட்டு சங்கம்

அமெரிக்க குடியரசுத்தலைவர் உட்ரோ வில்சனின் சிந்தனையில் உதித்ததே பன்னாட்டு சங்கம் ஆகும். வில்சன் உலக நாடுகள் யாவும் கூடி ஒத்துழைப்பை நல்கி உலக அமைதியை காக்க முற்படுவதற்கான தளம் ஒன்று இருப்பதன் அவசியத்தையுணர்ந்து அதனை ஏற்படுத்த விரும்பினார். பாரிஸ் அமைதி மாநாட்டின்போது முதல் உலகப்போர்நிறுத்த உடன்படிக்கைகள் அனைத்தையும் உள்ளடக்கி



12th_History_TM_Unit_13_V2.indd 238
1/6/2022 1:53:50 AM

சங்கம் ஏற்படுத்துவதற்குரிய பொதுஆவணம் (Covenant) உருவாக்கப்பட்டது. அவர் ஜெர்மனியின் தோல்வியைத் தொடர்ந்து இராணுவவாதம் மறுக்கப்படவும், அதையடுத்து உறவுகளை சீரற்ற அதிகார சமநிலைக்குத் தள்ளாமல் சுமுகமாகக் கொண்டு செல்லும் வகையில் உறுப்புநாடுகளின் அமைப்பு உருவாக்கப்படவும் வேண்டும் என நினைத்தார். அதனால் வில்சன் தனிப்பட்ட ஆர்வம் கொண்டு இச்செயல் நடந்தேறுவதைக் காண முற்பட்டார்.



பன்னாட்டு சங்கம்

### அமைப்பு மற்றும் அங்கம்

இவ்வமைப்பிற்கான அரசியல் சாசனத்தை ஏற்படுத்தும்போது அமெரிக்கா மற்றும் பிரிட்டனின் சிந்தனைகளே மேலோங்கி நின்றன. சங்கம் ஐந்து உறுப்புகளைக் கொண்டிருந்தது: அவை பொதுச்சபை, குழு, செயலகம், நிரந்தர நீதிமன்றம் மற்றும் பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு ஆகியவைகளாகும். ஒவ்வொரு உறுப்புநாடும் அவையில் பிரதிநிதித்துவம் கொண்டிருந்தன. அவையின் உறுப்பினர்கள் பொதுக்கொள்கைகள் குறித்து விவாதித்து முடிவுகளை ஒருமனதாக எடுக்க முற்பட்டனர். குழுவே சங்கத்தின் நடைமுறைப்படுத்தும் (Executive) உறுப்பாக விளங்கியது. பிரிட்டன், பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், அமெரிக்க ஐக்கிய நாடு ஆகியவையே குழுவின் நிரந்தர உறுப்பினர்களாக ஆரம்பத்தில் பிரகடனப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு மட்டுமே என்ற நிலையில், அனைத்து முடிவுகளும் ஒரு மனதாக எடுக்கப்பட வேண்டும் என்பதால், நடைமுறையில் சிறுதேசங்களும் தடுப்பதிகாரம் (Veto power) கொண்டிருந்தன.

### செயலகம்

பன்னாட்டு சங்க செயலகம் ஜெனீவாவில் அமைக்கப்பெற்று அதன் முதல் பொதுச்செயலர் பதவியை பிரிட்டனின் சர் எரிக் ட்ரம்மோன்ட் ஏற்றுக்கொண்டார். தி ஹேக் நகரில் பன்னாட்டு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு ஒரு செயலகத்தையும், ஒரு பொது மாநாட்டையும் உள்ளடக்கியதாக இருந்ததோடு, ஒவ்வொரு நாட்டிற்கும் நான்கு பிரதிநிதித்துவத்தை வழங்கியிருந்தது.

### சங்கத்தின் குறிக்கோள்கள்

பன்னாட்டு சங்கத்தின் இருமுனை குறிக்கோள் என்பது போரைத் தவிர்ப்பதும், உலக அமைதியை நிலைநிறுத்தி பொருளாதார மற்றும் சமூகத் தளங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதுமாகும். சங்கம் எந்த ஒரு சிக்கலையும் பெரிதாக்கிவிடாமல் ஆரம்பகட்டத்திலேயே சமரசப்படுத்தியும், மத்தியஸ்தராக செயல்பட்டும் தீர்க்க முனைந்தது. மத்தியஸ்தத்தை மீறி போர் ஏற்பட்டால் போர்தொடுப்போர் மீது உறுப்புநாடுகள் முதலில் பொருளாதாரத் தடைகளை விதித்தும், பின் இராணுவத்தடையை விதித்தும் செயலாற்ற வேண்டும் என கொள்ளப்பட்டது. இக்குறிக்கோளை எட்ட ஆரம்பம் முதற்கொண்டே சிக்கல் ஏற்படக் காரணமாக கூறப்படுவது மூன்றுப் பெரும் சக்திகளான அமெரிக்க ஐக்கிய நாடு (உறுப்பினராகமல் இருந்தது), ஜெர்மனி (தோற்கடிக்கப்பட்ட நாடு) மற்றும் ரஷ்யாவின் பங்கெடுப்பு இல்லாமல் போனதேயாகும். ஜெர்மனி 1926லும் ரஷ்யா 1934லும் சங்கத்தில் இணைந்தன. ஆனால் ஜெர்மனி 1933இல் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துவிட, ரஷ்யாவோ 1939இல் சங்கத்திலிருந்து வெளியேற்றப்பட்டது.

### சங்கத்தின் செயல்பாடுகள்

சங்கம் 1920 முதல் 1925 வரையான காலத்தில் பல சிக்கல்களைத் தீர்த்துவைக்க அழைக்கப்பட்டிருந்தாலும் குறிப்பாக மூன்று பிரச்சினைகளை அது வெற்றிகரமாக அணுகியிருந்தது. ஆலந்து தீவுகளின் இறையாண்மை மீது ஸ்வீடனும், பின்லாந்தும் 1920இல் உரிமைகோரி சர்ச்சையைக் கிளப்பின. சங்கம் அத்தீவு பின்லாந்தையே சென்றுசேர நெறி ஏற்படுத்தியது. அடுத்த ஆண்டு மேல்புற சைலேசியாவை முன்னிறுத்தி போலந்தும், ஜெர்மனியும் சர்ச்சையைக் கிளப்பியபோது சங்கம் அதில் தலையிட்டு வெற்றிகரமாகத் தீர்த்துவைத்தது. மூன்றாவது சிக்கல் 1925இல் கிரீசுக்கும், பல்கேரியாவிற்கும் இடையே நடந்ததாகும். கிரீஸ் பல்கேரியா மீது படையெடுத்தபோது சங்கம் போர்நிறுத்த ஆணையை வெளியிட்டு ஆக்கிரமிப்பை நிறுத்தியது. விசாரணை மேற்கொண்ட பின் கிரீசை நஷ்டஈடு வழங்க ஆணையிட்டது.

சர்வதேச அபினி பரிமாற்றத்தைக் குறைத்ததிலும், ஏழ்மையிலிருந்த நாடுகளின் ஆபத்தான நோய்கள் பரவுதலைத் தடுத்ததிலும் சிறப்பான பங்காற்றி சங்கம் தன் இருப்பை



12th_History_TM_Unit_13_V2.indd 239 1/6/2022 1:53:51 AM

நியாயப்படுத்திக் காட்டியது. அதன் முகமைகள் தொழிலாளர் குறித்தும், வணிக சூழல் குறித்தும் பெருமளவில் தரவுகளை உலகம் முழுவதிலுமிருந்தும் சேமித்துவைத்தன. சர்ச்சைக்குரியப் பகுதிகளில் அது பொதுவாக்கெடுப்பு நடத்தியதோடு அகதிகளுக்கு வாழ்விடம் கிடைக்கத் துணைபுரிந்தது. பன்னாட்டு சட்டங்கள் இயற்றப்பட துவக்க நடவடிக்கைகளை மேற்கொண்டது.

### அத்துமீறல் சம்பவங்கள்

ஐரோப்பிய சக்திகள் எதிர்கொண்ட முக்கியமானப் பிரச்சினைகளில் ஒன்று ஆயுதவொழிப்பை சென்றடைவது பற்றியதாகும். சங்கத்தின் குழு 1925ஆம் ஆண்டு ஓர் ஆணையத்தை நியமித்து ஆயுதவொழிப்பு மாநாட்டை நடத்தப் பணித்தது. ஆனால் அவ்வாறான மாநாடு 1932ஆம் ஆண்டுதான் நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் பிரான்சுக்கு சமமாக ஆயுதம் வைத்துக்கொள்ளும் அந்தஸ்தை ஜெர்மனி கோரியது நிராகரிக்கப்பட்டது. இதனால் அம்மாநாட்டிலிருந்தும், சங்கத்திலிருந்தும் ஹிட்லர் ஜெர்மனியை வெளிக்கொணர்ந்தார்.

வில்னாவை 1920இல் போலந்து ஆக்கிரமித்தபோது சங்கத்தால் ஏதும் செய்யமுடியாமல் போயிற்று. இத்தாலிக்கும், கிரீசுக்கும் 1923இல் போர் அபாயம் மூண்டபோது, இத்தாலியர்கள் சங்கத்தின் மத்தியஸ்தத்திற்கு கட்டுப்பட மறுத்தனர். ஜப்பான் செப்டம்பர் 1931இல் மஞ்சூரியாவை தாக்கியபோது சங்கம் அதற்குக் கண்டனம் தெரிவித்தது. இதனால் ஜெர்மனியின் வழியில் ஜப்பானும் தனது உறுப்பினர் பொறுப்பை இராஜினாமா செய்தது. இத்தாலி எத்தியோப்பியாவை தாக்கியபோது சங்கம் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. தடை நடைமுறைக்கு வந்தபோது அதை எதிர்த்து இத்தாலி 1937இல் இராஜினாமா செய்தது.

இதற்குப்பின் சங்கம் ரைன்லாந்து, ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாகியா, போலந்து போன்ற பகுதிகளில் சிக்கல் ஏற்பட்டபோதெல்லாம் எதுவும் செய்ய இயலாமல் வெறும் பார்வையாளராக மட்டுமே இருந்தது. அதன் கடைசி முடிவென்பது பின்லாந்தை ரஷ்யா தாக்கியதற்காக அதனை டிசம்பர் 1939இல் சங்கத்தைவிட்டு வெளியேற்றியதேயாகும். அதன்பின் சபை மீண்டும் கூடாமலேயே 1946இல் பன்னாட்டு சங்கம் கலைக்கப்பட்டது.

### தோல்விக்கான காரணங்கள்

சங்கம் முதல் உலகப்போரில் வென்றோருக்கான மன்றம் போன்றே தோற்றம் கொண்டிருந்தது. உலகளாவிய உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் அது ஐரோப்பிய இராஜதந்திரத்தின் மையமாகவேத் திகழ்ந்தது.

அரசியல் சர்ச்சைகளில் அனைத்து உறுப்பினர்களின் ஒருமனதான முடிவு தேவை எனக் கொள்ளப்பட்டது. அதற்கென்று தனி இராணுவபலம் இல்லாதிருந்ததால் அதனுடைய முடிவுகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இவ்வமைதி அமைப்பை நிறுவியோர் தேசியவுணர்வின் வீரியத்தைக் குறைத்து மதிப்பிட்டதாகவேத் தெரிகிறது. "கூட்டுப் பாதுகாப்பு" எனும் கொள்கைக்கு செயல்வடிவம் கொடுப்பதில் சிக்கல் ஏற்பட்டது.

பன்னாட்டு சங்கம் ஓர் திறன் குறைந்த அமைப்பை போல் அதிகாரத்தை செயல்படுத்த முடியாமல் இருந்தது. அது முழுக்க உறுப்புநாடுகளின் நல்லெண்ணத்தையும் நேர்மறை அணுகுமுறையையுமே சார்ந்திருந்தது. சர்வாதிகார தலைவர்களால் ஆளப்பட்ட இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் சங்கத்தின் கட்டளைகளுக்கு இணங்க மறுத்தபோது பிரிட்டனும் பிரான்சும் மட்டுமே சங்கத்தின் முக்கிய சக்திகளாக செயலாற்றும் நிலை ஏற்பட்டது. ஆனால் சங்கம் வில்சனின் சிந்தனையில் உதித்த ஒன்று என்பதால் இவ்விரு நாடுகளுமே ஆர்வத்தோடு அதில் செயலாற்றவில்லை.

## 13.6 பொருளாதாரப் பெருமந்தம்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்குச்சந்தை வீழ்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்டப் பொருளாதார மந்தநிலை பன்னாட்டு தன்மை கொண்டு உலக பொருளாதாரத்தையே கடுமையான சறுக்கலுக்கு உட்படுத்தியது. முதல் உலகப்போரில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் அமெரிக்கா தனக்குரிய சந்தைகளை ஆக்கிரமித்துக் கொண்டும், முதலீட்டிற்கான தளத்தை விரிவுபடுத்தி அதனூடாக தனது தொழிற்துறையையும், வேளாண்துறையையும் செழுமைப்படுத்திக் கொண்டும் இருந்தது. போரின் முடிவில் அமெரிக்கா உலகின் மிக செல்வச்செழிப்பான நாடாக உருவாகியிருந்தது.

போர் அதீதமான கடன் சுமையை ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டின் மீதும் ஏற்றியிருந்தது. போரால் பாதிக்கப்பட்டிருந்த ஐரோப்பிய நாடுகளுக்கு அமெரிக்கா பெருமளவு கடன் வழங்கியிருந்தது. அமெரிக்காவிலிருந்து வெளியேறிய முதல் புது முதலீட்டுத் தளங்களைக் கண்டுகொண்டு அங்கு போய்ச்சேர்ந்தது. ஆனால் இம்முதலீடுகள் எதிர்பார்த்த


12th_History_TM_Unit_13_V2.indd 240 1/6/2022 1:53:51 AM

விளைவுகளை சிலகாலம் சென்ற பின்பே விளைவிக்கும். இதற்கிடையே உள்நாட்டில் ஏற்பட்ட வணிகச்சரிவின் காரணமாக வெளியில் கொண்டு செல்லப்பட்ட முதலீடுகள் வேறுவழியின்றி திரும்பப் பெறப்பட்டன. அமெரிக்க முதலீடுகள் திரும்பப் பெறப்பட்டதால் ஏற்றுமதிகளின் அளவும், மதிப்பும் உலகளாவியப் பெரும்சரிவை எதிர்கொண்டன. இதனால் ஏற்பட்ட விளைவுகளை அமெரிக்கப் பங்குச் சந்தை வீழ்ச்சி தீவிரப்படுத்தியது.

### அமெரிக்க ஐக்கிய நாட்டின் பங்குச்சந்தை வீழ்ச்சி



பங்குச்சந்தை வீழ்ச்சி

முதலாவது மாபெரும் பங்குச்சந்தை வீழ்ச்சியானது 1929 அக்டோபர் 24 அன்று ஏற்பட்டது. இதனால் அதிகமான மக்கள் தங்கள் வசமிருந்த பங்குகளை விற்று சந்தையிலிருந்து வெளியேறினார்கள். ஆனால் பங்குகளை வாங்குவோர் யாருமில்லை. இதனைத் தொடர்ந்து அமெரிக்க வங்கிகள் பேரிழப்பைக் கண்டன. அமெரிக்க நிதியாளர்கள் வெளிநாடுகளில் செய்துவைத்திருந்த முதலீடுகளைத் திரும்பப்பெற நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். ஜெர்மனிக்கு அமெரிக்கா கொடுக்கவிருந்த கடனை நிறுத்தியதால் அங்கிருந்த இரு பெரும்வங்கிகள் வீழ்ச்சியுற்றன. வெளிநாடுகளில் செயல்பட்டுக் கொண்டிருந்த வங்கிகளுக்கு தாராளமாகக் கடன் வழங்கி வந்த இங்கிலாந்து வங்கியும் (Bank of England) திவாலானது.

### பெருமந்தத்தின் பாதிப்புகள்

செலவு குறைப்பு, அதிகமான வரிவிதிப்பு போன்ற அவசரகால நடவடிக்கைகளை மேற்கொண்டும் இங்கிலாந்தின் நிலைமையில் முன்னேற்றம் ஏற்படவில்லை. பெருமந்தத்திற்கு எதிர்வினையாற்றவும், உள்ளூர் சந்தையைக் காக்கவும் ஒவ்வொரு நாடும் தனிப் பாதுகாப்புக் கொள்கையை உருவாக்கிக் கொண்டதோடு தங்களின் பணமதிப்பை குறைத்துக்கொள்ளவும் செய்தன. பணமதிப்பிறக்கம் கடன்வழங்குவோரை கடனளிப்பதை நிறுத்திக்கொள்ளத் தூண்டியது. இதனால் உலகளாவிய கடன் புழக்கம் சுருங்கியது. வெவ்வேறு நாடுகளால் கைக்கொள்ளப்பட்ட இத்தற்காப்பு நடவடிக்கை உலகப் பொருளாதார சுழற்சியில் எதிர்பாராத கடும் வீழ்ச்சியை விளைவித்தது. அதன் பாதிப்புகள் ஆழமாகவும், நீண்டகாலம் நீடித்ததாகவும் இருந்ததால் பொருளாதார நிபுணர்களும்,வரலாற்றாசிரியர்களும் இந்நிகழ்வைப் பொருளாதாரப் பெருமந்தம் என்று குறிப்பிடுகிறார்கள்.

### அரசியலில் நிகழ்ந்த மாற்றங்கள்

பெருமந்தம்பல நாடுகளிலும்அரசியல்நிலையில் மாற்றங்களை விளைவித்தது. இங்கிலாந்தில் 1931இல் நடைபெற்ற தேர்தலில் தொழிலாளர் கட்சி தோற்கடிக்கப்பட்டது. அமெரிக்காவில் பெருமந்தத்திற்கு முந்தைய வளமான ஏற்றத்திற்குக் காரணமானோர் என பெருமைபெற்ற குடியரசு கட்சி மந்தத்திற்குப் பின் தொடர்ச்சியாக இருபது ஆண்டுகளுக்கு ஆட்சியமைக்க முடியாமல் போனது. நாம் கீழே காணப்போவது போல பாசிச கட்சிகள் ஜெர்மனியிலும், இத்தாலியிலும் அரசு அதிகாரத்தைத் தங்கள் வசமாக்கிக் கொண்டன. தென் அமெரிக்காவின் அர்ஜென்டினா, பிரேசில், சிலி ஆகிய நாடுகளிலும் அரசுமாற்றம் நிகழ்ந்தது.

## 13.7 பாசிசவாதமும் நாசிசவாதமும் தோன்றுதல்

முதல் உலகப்போரைத் தொடர்ந்து ஐரோப்பிய கண்டத்தில் இருந்த நாடுகள் எதிர்கொண்ட சிக்கல் என்பது தமது அரசும், பொருளாதார முறையும் நிலமானியப் பின்புலத்தை கொண்ட பிரபுக்கள், தொழிலதிபர்கள், நிதியாளர்கள் போன்றோரால் நிர்வகிக்கப்படுவதா அல்லது இவையாவும் சேர்ந்த கூட்டுக் கலவையாலான ஒன்றாலா என்பதேயாகும். இவ்வுயர் வர்க்கங்களை சேர்ந்த எவரும் மக்களின், குறிப்பாக விவசாயக் குடிகள் தொழிலாளர் போன்றோரின், ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. புதிதாக உதித்த சூழலில் சாமானிய மக்கள் தங்களை ஒடுக்குவோரைத் தூக்கியெறிய வாய்ப்புள்ளமையை உணர்ந்துகொண்டார்கள். ரஷ்யாவில் நடுத்தர வர்க்கம் (Bourgeoisie) 1917ஆம் ஆண்டு அரசை சர்வாதிகார முறைக்கு மாற்றிய சிறிது காலத்தில் அவர்களே போல்ஷ்விக்குகளால் மாற்றப்பட்டார்கள். பிரிட்டனில் எழுந்த சூழலைக் கைக்கொள்ள தொழிலாளர் கட்சி பொதுநல அரசை நிறுவியது. இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகள் எதிர்கால வெற்றியை இலக்காகக் கொண்டு துவக்கத்தில் மக்கள் இயக்கம் போன்று செயலாற்றிப் பின் பாசிசப் பாதைக்கு மாறின.



12th_History_TM_Unit_13_V2.indd 241 1/6/2022 1:53:51 AM

## (அ) இத்தாலியின் பாசிசப் போக்கு

மேற்கு ஐரோப்பாவில் பழைய ஆட்சிமுறைக்கு எதிராகத் திரும்பிய முதல் நாடு இத்தாலியே ஆகும். முதல் உலகப்போரின்போது இத்தாலி ஐந்தரை மில்லியன் நபர்களை களத்திலிறக்கியதில் 700,000 நபர்கள் கொல்லப்பட்டார்கள். போரில் பங்கெடுத்தமையால் ஏற்பட்ட செலவினங்களும் மிக அதிகமானதாக இருந்தது. சோஷலிசவாதிகளும், ஆஸ்திரிய கத்தோலிக்க சார்புகொண்டோரும் ஆதரவளிக்காத இப்போரில் நாடு கடும் சேதங்களைச் சந்தித்தது. வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் கீழ் சொற்ப ஆதாயத்தையே இத்தாலி நாடு அடைந்திருந்ததால் தேசியவாதிகளும் அதிருப்தியடைந்திருந்தனர். போர் பணவீக்கத்தையும் அது விளைவித்த விலையேற்றம், ஊகத்தொழில் பாதிப்புகள், லாபமீட்டும் நோக்கத்தின் பெருக்கம் போன்றவற்றையும் ஒருங்கே கொண்டுவந்து சேர்த்தது. கண்டன ஆர்ப்பாட்டங்களும், வேலை நிறுத்தங்களும் அதிகமாயின. வெர்செய்ல்ஸ் அவமானத்திற்கு ஆட்சியாளர்களே காரணமென மக்கள் கருதினார்கள்.

### சோஷலிச அமைப்புகளின் எழுச்சி

துயரங்கள் கூடியபோது, அங்கே சோஷலிச சிந்தனை பரவத் தொடங்கியது. இத்தாலிய சோஷலிஸ்டுகள் 1918இல் சர்வதேச பொதுவுடைமையோடு இணைய வாக்களித்தார்கள். தேர்தல்கள் நவம்பர் 1919இல் நடந்தபோது அவர்கள் பிரதிநிதிகள் அவைக்கு மூன்றில் ஒரு பங்கு இடங்களைப் பெற்றிருந்தார்கள். தீவிரவாதப்போக்கு கிராமப்புறங்களிலும் செல்வாக்கு பெற்றது. பெரும் நிலவுடைமைகளை உடைத்தெறியும் நோக்கோடு சிகப்பு சங்கங்கள் பல தோன்றி நிலக்கிழார்களை வாடகையைக் குறைத்துக்கொள்ள நிர்ப்பந்தித்தன. நிலவுடைமையாளர் வர்க்கத்திற்கு தங்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் நோக்கு பாசிசவாதிகளுக்கு இல்லாமல் போனதால் அது அவர்களுக்கு குறைந்தபட்ச ஆபத்தை மட்டுமே ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகக் காட்சியளித்தது.

### முசோலினி ஏற்றமடைதல்

பெனிட்டோ முசோலினி (1883–1945) ஒரு இரும்புக்கொல்லரின் மகனாகப் பிறந்தார். ஆரம்பக்கல்வி ஆசிரியராகத் தேர்ச்சிபெற்ற அவர் மேற்கொண்டு படிப்பதற்காக சுவிட்சர்லாந்திற்கு சென்று சோஷலிசப் பார்வைக்கொண்ட பத்திரிகையாளரானார். முன்னணி சோஷலிச தினசரிப் பத்திரிகையான அவந்தியில் (Avanti) ஆசிரியராகப் பணியேற்றார். 1919இல் பாசிசக் கட்சி உருவாக்கப்பட்டவுடன் அதில் உடனடியாக முசோலினி இணைந்தார். பாசிசவாதம் அதிகாரசக்தி, வலிமை, ஒழுக்கம் போன்றவற்றை தாங்கிநின்றதால் தொழிலதிபர்கள், தேசியவாதிகள், முன்னாள் படைவீரர்கள், நடுத்தர வர்க்கத்தினர், அதிருப்தி கொண்ட இளைஞர்கள் போன்றோர் அதற்கு ஆதரவு நல்கினர். பாசிசவாதிகள் தடையின்றி வன்முறையில் ஈடுபட்டு தங்களின் எதிரிகளை கத்தி, பெருந்தடிகள், துப்பாக்கி போன்ற ஆயுதங்களைக் கொண்டு தாக்கினர்.



முசோலினி

போரின் முடிவில் எழுந்த ஒழுங்குமுறைக் குலைவுகளை சரிசெய்ய பாராளுமன்ற முறையிலான அரசு திணறியதால் அதன் வீழ்ச்சியிலிருந்தே பாசிச சர்வாதிகாரம் தோன்றியது. ஜனநாயக கட்சியின் தலைவர்கள் தீர்க்கமான பார்வையோடும், உறுதியோடும் செயலாற்ற தவறியமையே முசோலினியின் வெற்றிக்கு வழிவகுத்தது. பொதுவுடைமைவாதிகளுக்கும், அவர்களின் எதிர்தரப்பினருக்குமிடையே எழுந்த பிணக்குகள் உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த நிலையில் கருப்புசட்டை அணிந்த பாசிசவாதிகள் (கருஞ்சட்டையினர்) ரோமில் நடத்திய பேரணியே (அக்டோபர் 1922) அதைத் தவிர்க்கக் காரணமாக விளைந்தது. அவர்களின் பலத்தால் ஈர்க்கப்பட்ட மன்னர் மூன்றாம் இம்மானுவேல் முசோலினியை ஆட்சியமைக்க அழைத்தார்.

**பாசிசவாதம்:** பாசிசம் என்ற பதத்தின் மூலச்சொல்லான பாசஸ் என்னும் லத்தீன் சொல் ரோமானிய தேசத்தின் அதிகாரத்தைக் குறிக்கும் தடிகளால் சூழப்பட்ட கோடாரியைச் சுட்டுவதாகும்.

பாசிசம் என்பது ஒருவகையான தீவிர அதிகாரங்கொண்ட உயர் தேசியவாதம் கலந்த சர்வாதிகார சக்தியையும், அதனால் வலுப்பெற்ற எதிரிகளை ஒடுக்கும் தன்மையையும், சமூகத்தையும், பொருளாதாரத்தையும் மையப்படுத்தும் போக்கையும் உள்வாங்கி இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஐரோப்பாவில் முக்கியத்துவமடைந்த ஒன்றாகும்.

### முசோலினியின் கீழ் பாசிசவாதிகள்

வாக்காளர்களை அச்சுறுத்தி 1924ஆம் ஆண்டின் தேர்தல்களில் 65 சதவீத வாக்குகளைப்



12th_History_TM_Unit_13_V2.indd 242 1/6/2022 1:53:52 AM

பெற்று பாசிசவாதிகள் வெற்றி பெற்றிருந்தனர். தேர்தலின் நேர்மை பற்றிக் கேள்வியெழுப்பிய மட்டியோட்டி (Matteotti) என்னும் சோஷலிச தலைவர் கொலை செய்யப்பட்டார். இதனால் எதிர்கட்சிகள் பாராளுமன்றத்தைப் புறக்கணித்து தங்கள் எதிர்ப்பைப் பதிவுசெய்தன. முசோலினி எதிர்கட்சிகளுக்கு தடைவிதித்தும், பத்திரிகை சுதந்திரத்திற்கு தடை விதித்தும் நிலைமையைக் கட்டுப்படுத்தினார். எதிர்கட்சித் தலைவர்கள் கொல்லப்படவோ, கைது நடவடிக்கைக்கு உட்படவோ ஆளானார்கள்.

இத்தாலியின் இரண்டாம் தலைவன் (Il Duce) என்று தனக்குப் பட்டமளித்துக் கொண்ட முசோலினி 1926இல் சட்டமியற்றும் அதிகாரம் கொண்ட சர்வாதிகாரியாக உருவெடுத்திருந்தார். வேலை நிறுத்தங்களுக்கும் தொழிற்சாலையடைப்புக்கும் (lockout) தடைவிதித்து சட்டமியற்றினார். தொழிற்சங்கங்களும், ஊழியர்களும் வாரியங்களுக்குள் (Corporation) எடுத்துச் செல்லப்பட்டு அதனூடாக அவர்களின் ஊதியம், பணிச்சூழல் சார்ந்த பிரச்சினைகள் அணுகப்பட்டன. விடுபட்ட பிற மக்களும் தொழில் அடிப்படையில் வாரியங்களாகப் பிரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டார்கள். இவை தொடர்ந்து கூட்டமைப்பாக்கப்பட்டு வாரியத்துறை அமைச்சரால் கண்காணிக்கப்பட்டன.

பாராளுமன்றம் 1938இல் கலைக்கப்பட்டு அது பாசிச கட்சியையும் வாரியங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பாக மாற்றியமைக்கப்பட்டது. இப்புதிய ஏற்பாடு பொருளாதாரத்தின் மீது முசோலினியின் சர்வாதிகாரப் பிடியை இறுகச் செய்ததோடு நிர்வாகத்தையும் ஆயுதப் படைகளையும் அவரது எதிர்ப்பில்லா தலைமையின் கீழ் கொண்டுபோய்ச் சேர்த்தது. இவ்வாறாக முசோலினி பாராளுமன்ற அரசையும் தொழிற்சங்கங்களையும் பிற ஜனநாயக அமைப்புகளையும் ஒழித்தார்.

### முசோலினி போப்பாண்டவரோடு உடன்படிக்கை ஏற்படுத்துதல்

பாசிச கட்சிக்கு மதிப்பை சம்பாதிக்கும் நோக்கோடு முசோலினி வாட்டிகன் நகருக்கு தனிநாடு அங்கீகாரம் வழங்கி ரோமன் கத்தோலிக்க திருச்சபையைத் தன்பக்கம் ஈர்த்தார். இதற்கு கைமாறாக கத்தோலிக்க திருச்சபை இத்தாலியப் பேரரசை அங்கீகரித்தது. இத்தாலியின் தேசிய சமயமாக ரோமன் கத்தோலிக்க மரபு ஏற்றுக்கொள்ளப்பட்டு பள்ளிகளில் சமயக்கல்வி கட்டாயமாக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறியவற்றை உள்ளடக்கிய லேட்டரன் உடன்படிக்கை (Lateran Treaty) 1929இல் கையெழுத்திடப்பட்டது.



லேட்டரன் உடன்படிக்கை

### பொருளாதாரப் பெருமந்தத்தின் காலம்

அமெரிக்க ஐக்கிய நாடு 1929ஆம் ஆண்டு மிகப்பெரும் நிதி மற்றும் வணிக வீழ்ச்சிக்கு உள்ளானது. உலகின் பிற பாகங்களில் இதன் பாதிப்பு மிக மோசமாக வெளிப்பட்டது. ஐரோப்பிய வாணிபமும் நிதிநிலையும் 1931இல் முழுதும் முடங்கிப்போயின. இக்காலகட்டத்தில் பாசிச அரசு தனக்கு எந்த பாதிப்பும் இல்லை என பொதுப்பணித்துறையை சுட்டிக்காட்டிப் பெருமை கொண்டாலும் இக்காலத்தில் புதிய பாலங்கள், சாலைகள், கால்வாய்கள், மருத்துவமனைகள், பள்ளிகள் போன்றவை எழுப்பப்பட்டாலும் அதனால் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லை. உலக நாடுகள் சங்கத்தின் வீழ்ச்சி 1935ஆம் ஆண்டையொட்டிய காலத்தில் உறுதியானவுடன் முசோலினி இத்தாலிக்கென ஒரு பெரும் பொருளாதாரப் பேரரசை உருவாக்கும் எண்ணங்கொண்டு எத்தியோப்பியா மீது படையெடுத்தார். இது பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப உதவியது. முசோலினியின் வெற்றி ஐரோப்பாவின் பிற பகுதிகளிலிருந்த ஆளும் வர்க்கத்தின் வியப்பை பெற்றது. அவர்களில் மூனிச் பகுதியை மையமாக அமைத்துப் புகழ்பெற்றுக் கொண்டிருந்தவரும், தேசியவாதியும், யூத எதிர்ப்பாளருமானவர் ஒருவர்: அவரே அடால்ஃப் ஹிட்லர்.

## (ஆ) போருக்குப் பிந்தைய ஜெர்மனி

பாசிசவாதம் ஜெர்மனியில் ஏற்றம் பெறப் பலகாரணிகள் உள்ளன. அவற்றுள் முதன்மையானது போரில் தோற்கடிக்கப்பட்டமையால் எழுந்த அவமானமாகும். ஜெர்மனி 1871 முதல் 1914 வரையான காலத்தில் பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரத் தளங்களில் பல சாதனைகளை நிகழ்த்தியிருந்தது. ஜெர்மனியின் பல்கலைக்கழகங்கள், அதன்



12th_History_TM_Unit_13_V2.indd 243 1/6/2022 1:53:52 AM

விஞ்ஞானம், தத்துவம், இசை ஆகியவை உலகப்புகழ் பெற்றிருந்தன. பிரிட்டனையும் அமெரிக்க ஐக்கிய நாட்டையும் தொழில் உற்பத்தியின் பல்வேறுப் புலங்களில் ஜெர்மனி விஞ்சி நின்றது. இதனைத் தொடர்ந்தே உலகப்போரின் பெரும் தோல்வி அதனைச் சூழ்ந்தது. ஜெர்மானிய மக்கள் விரக்தியடைந்தார்கள். வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நஷ்டஈடும், பிற சரத்துக்களும் பெரும் அதிருப்தியையும், சிரமத்தையும் ஏற்படுத்தின. சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொள்ள விழைந்த பிற்போக்கு சக்திகள் அரசில் அங்கம் வகித்த சோஷலிஸ்டுகளும் யூதர்களுமே தேசத்திற்கெதிராகச் செயலாற்றியதாகவும் அவர்களே தோல்வியை விளைவித்தவர்கள் என்றும் பரப்புரையாற்றின.

ஜெர்மனி எப்போதுமே ஒரு இராணுவ தேசமாகவே இருந்துள்ளது. இராணுவம் பாதுகாப்பின் சின்னமாக மட்டுமல்லாமல் தேசப்பெருமையின் அடையாளமாகவும் விளங்கியது. இச்சூழலில் முதல் உலகப்போரின் முடிவில் ஏற்பட்ட ஜெர்மனியின் தோல்வியும், அதைத் தொடர்ந்த அவமானமும் ஜெர்மானியர்களுக்குப் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர்களின் ஏமாற்றத்தைப் பொருளாதாரப் பெருமந்தம் ஆழப்படுத்தியதோடல்லாமல் குடியரசு கட்சி அரசின் மீதும் அதீத வெறுப்புணர்வை வளர்த்தது.

### 1920களில் ஜெர்மனி



ஹிட்லர்

முதல் உலகப் போருக்குப் பின் ஜெர்மனியில் பல கட்சிகளின் கூட்டணியில் மக்களாட்சி அரசுகள் நடைபெற்றது. 1919 முதல் 1925 வரை எபெர்ட் (Ebert) என்னும் சோஷலிசவாதி தலைமையிலும் அதன்பின் 1929 வரை லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் ஸ்ட்ரெஸிமண் (Stresemann) தலைமையிலும் ஜெர்மனி நிர்வகிக்கப்பட்டது. நாஜிக்கள் 1933இல் ஏற்றம் பெறும்வரை சென்ற இக்காலம் வெய்மர் குடியரசு (Weimar Republic) என்றழைக்கப்படுகிறது.

இடைப்பட்ட இக்காலத்தில் சராசரியான ஒரு ஜெர்மன் குடிமகன் போர் இழப்பீடு கொடுத்து கடன்சுமையில் தத்தளித்து வறுமைக்குட்பட்டிருந்த நாட்டில் அன்றாட வாழ்க்கைப்பிரச்சனை பற்றி மட்டுமே சிந்திக்க முடிந்தது. பிரெஞ்சுக்காரர்கள் 1923இல் ரூர் பகுதியில் ஆக்கிரமிப்பு நடத்தியமையால் கொதிப்படைந்த தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டும் விதமாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இது சில திரைமறைவு செயல்பாடுகள் பரவ வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது. பெர்லின் நகரில் குடியரசு கட்சியின் அரசுக்கு எதிராக லூடன்டார்ஃப் என்பவர் முன்னாள் படைவீரர்களை மறைமுகச் செயல்பாடுகளுக்காகத் திரட்டியிருந்தார். மற்றொன்று மூனிச் நகரில் முன்னாள் படைத்துறை அலுவலர் (corporal) ஒருவரின் தலைமையில் செயலாற்றி வந்தது. அவர் தேசிய சோஷலிச ஜெர்மன் தொழிலாளர் கட்சியை (National Socialist German Worker's Party) நிறுவிய அடால்ஃப் ஹிட்லர் ஆவார்.

### ஜெர்மானிய பாசிசத்தின் பரிணாம வளர்ச்சி

முதல் உலகப்போரின்போது ஹிட்லர் பவேரிய இராணுவத்தில் பணியாற்றினார். யூதர்கள் மீதும், மார்க்சியவாதிகள் மீதும் அவர் உள்ளார்ந்த வெறுப்பைக் கொண்டிருந்தார். தேர்ந்த பேச்சாளரான அவர், தனது உரையை கேட்போரின் உணர்வுகளைத் தொடும் திறன் கொண்டிருந்தார். ஹிட்லர் 1923இல் பல ஆபத்துக்களுக்கிடையே பவேரியாவில் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைந்தார், சரியாகத் திட்டமிடப்படாமல் மூனிச்சின் புறநகர் பகுதிகளில் அவர் நடத்த முயன்ற தேசிய புரட்சி அவரை சிறைக்குள் கொண்டு சேர்த்தது. சிறையில் இருக்கும் காலத்தில் அவர் தனது அரசியல் சிந்தனைகளை மையமாகக் கொண்டு 'எனது போராட்டம்' (மெய்ன் காம்ப் – Mein Kampf) என்ற சுயசரிதை நூலை எழுதினார்.

ஜெர்மானிய அரசின் பலவீனத்தை வெளிப்படுத்தும் இரு சம்பவங்கள் 1929இல் நடந்தேறின. ஸ்ட்ரெஸிமணின் மரணம் ஒரு அரசியல் வெற்றிடத்தை உருவாக்கியிருந்தது. நியூயார்க் பங்குச்சந்தையில் நேர்ந்த வீழ்ச்சி பொருளாதார மந்தத்தை ஏற்படுத்தியதோடு அமெரிக்க ஐக்கிய நாட்டை தாம் ஜெர்மனிக்கு வழங்கியிருந்த கடன்களை குறித்த காலத்திற்கு முன்பே வசூலிக்க நிர்ப்பந்தித்தது. உலகப் பொருளாதாரப் பெருமந்தம் 1931இல் வலுவிழந்த நிலையிலிருந்த ஜெர்மனியை தன்பிடிக்குள் சிக்கவைத்தது. பொதுவுடைமை கட்சி 1932இல் நடந்த குடியரசுத்தலைவர் தேர்தலில் 60,00,000 வாக்குகளைப் பெற்றது. இதனால் சுதாரித்துக்கொண்ட முதலாளிகளும் நிலவுடைமையாளர்களும் பாசிசவாதத்தின் பக்கம் சரிந்தனர். அதை நன்கு பயன்படுத்திக்கொண்ட ஹிட்லர் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றினார்.



12th_History_TM_Unit_13_V2.indd 244 1/6/2022 1:53:52 AM

### மூன்றாவது ரெய்ச் (ஹிட்லரின் நாஜி அரசு)

சமூக ஜனநாயகவாதிகளோடு பொதுவுடைமைவாதிகள் இணைந்துப் பணியாற்ற விரும்பாததால் குடியரசு கட்சியின் அரசு வீழ்ச்சியுற்றது. இதனைத்தொடர்ந்து தொழிலதிபர்கள், வங்கி உரிமையாளர்கள், அரசப் பாரம்பரியப் பின்புலம் கொண்டவர்கள் ஆகியோர் ஹிட்லரை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொள்ள விழைந்து 1933ஆம் ஆண்டு குடியரசுத்தலைவர் வான் ஹின்டன்பர்கை (Von Hindenberg) அணுகி அவரை பிரதம அமைச்சராகப் (Chancellor) பணித்தார்கள். மூன்றாவது ரெய்ச் (Third Reich) என்று குறிப்பிடப்படும் ஹிட்லரின் நாஜிஅரசு ஜெர்மனியில் முதல் உலகப்போருக்குப் பின்பு ஏற்படுத்தப்பட்ட பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

ஹிட்லர் வெய்மர் குடியரசின் கொடியை அகற்றி அவ்விடத்தில் தேசிய சோஷலிசத்தின் ஸ்வஸ்திகா சின்னத்தைப் பதித்தார். ஜெர்மனி முழுமையாகவே ஒரு மையப்படுத்தப்பட்ட அரசாக மாற்றப்பட்டது. நாஜி கட்சி நீங்கலாகப் பிறகட்சிகள் சட்டத்திற்குப் புறம்பானவையாக அறிவிக்கப்பட்டன. பழுப்பு நிற சட்டையும், முழங்கால் வரையிருக்கும் காலணியும் (jackboot) அணிந்த அதிரடிப்படையினரின் எண்ணிக்கை நாளுக்குநாள் உயர்ந்துகொண்டே சென்றது. ஹிட்லரின் இளைஞரணி ஏற்படுத்தப்பட்டு, தொழிலாளர் முன்னணி உருவாக்கப்பட்டது. தொழிற்சங்கங்கள் ஒழிக்கப்பட்டு அதன் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். தொழிலாளர்களனைவரும் ஜெர்மானிய தொழிலாளர் முன்னணியில் உறுப்பினர்களாக சேரக் கட்டாயப்படுத்தப்பட்டார்கள். வேலைநிறுத்தங்கள் சட்டத்திற்குப் புறம்பானவைகளாக்கப்பட்டும் ஊதியத்தை அரசே நிர்ணயித்தும் ஜெர்மானிய தொழிலாளர் முன்னணியை கொண்டு நாஜிக்களே தொழிற்சாலைகளைக் கட்டுப்படுத்தவும் என்பதான நிலை உருப்பெற்றது. பத்திரிகை, நாடக அரங்கு, திரைப்படம், வானொலி மற்றும் கல்வி போன்றவை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன.

நாஜி கட்சியின் பரப்புரையை, மக்களின் கருத்தோட்டத்தைத் திட்டமிட்டு திசைதிருப்பும் ஆற்றல் கொண்டிருந்த ஜோசப் கோயபெல்ஸ் (Josef Goebbels) தலைமையேற்று வழிநடத்தினார். ஒருமுறை அவர் 'எந்தப் பொய்யும் மீண்டும் மீண்டும் சொல்லப்படும்போது உண்மை என நம்பப்படும்' என்றார். கெஸ்டபோ (Gestapo) என்ற நாட்டின் இரகசியப்போலீஸ் பிரிவை ஹிம்லர் (Himmler) கட்டுப்படுத்தியதோடு ஹிட்லரின் மெய்க்காவலர்களையும் அவரே நியமித்தார்.

### நாஜிக்களின் யூதக் கொள்கை

உள்ளபடியே செயலாற்றிக்கொண்டிருந்த ஒடுக்குமுறைகளோடு ஹிட்லரின் அரசு யூதர்களை ஒடுக்கும் கொள்கையைப் பின்பற்றியது. யூதர்கள் அரசுப்பணிகளிலிருந்து நீக்கப்படவும், பல்கலைக்கழகங்களில் ஒதுக்கப்பட்டும், குடியுரிமை மறுக்கப்பட்டும் சிரமத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். யூதர்களின் வியாபாரங்கள் முடக்கப்பட்டு அவர்களின் நிறுவனங்கள் தாக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போர் துவங்கியபோது யூதர்கள் குவிமுகாம்களிலும் மின்சாரவேலியாலும் காவற்கோபுரங்களாலும் சூழப்பட்ட குறுகலான இருப்பிடங்களிலும் சிறைவைக்கப்பட்டு சரியான உணவு வழங்கப்படாமல் கட்டாய ஊழியத்திற்கு உட்படுத்தப்பட்டார்கள். இவையாவும் யூதர்களைக் கொல்லும் களங்களாக மாற்றப்பட்டு விஷவாயு அறைகள் போன்ற தொழில்முறை உயிரெடுக்கும் உத்திகளைக் கொண்டிருந்தன. 'இறுதியான தீர்வு' (Final Solution) என்று நாஜிக்களால் குறிப்பிடப்படும் இந்த நடவடிக்கையின்கீழ் ஐரோப்பாவில் 6 மில்லியன் யூதர்கள் கொல்லப்பட்டார்கள். யூதர்கள் நீங்கலாக நாடோடி குழுக்கள் மற்றும் மனநிலை பிறழ்வுகொண்டோர் ஆகியோரும் கொல்லப்பட்டனர். ஹிட்லரை எதிர்த்துப் பல்லாயிரக்கணக்கான ஜெர்மானியர்களும் கொல்லப்பட்டார்கள்.

### வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் சரத்துகளை மீறுதல்

ஹிண்டன்பர்க் ஆகஸ்ட் 1934இல் இறந்ததும் ஹிட்லர் பிரதம அமைச்சராக மட்டுமல்லாமல் குடியரசுத்தலைவராகவும் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்றார். நாஜி கட்சி 1938இல் இராணுவத்தின் மீதான தனது பிடியை இறுக்கியது. ஹிட்லரின் வெளியுறவுக் கொள்கையானது ஜெர்மனியின் ஆயுதப்படை வலிமையை அதிகரிப்பதும் நாட்டின் பெருமையை சீர்குலைத்த வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துகளை மீறுவதையுமே அடிப்படையாகக் கொண்டிருந்தது. அவர் வேண்டுமென்றே வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை முறிக்க (பின்வரும் பாடத்தில் அது விவாதிக்கப்படுகிறது) எடுத்துக்கொண்ட முயற்சிகளே இரண்டாம் உலகப் போர் வெடிக்கக் காரணமாயிற்று.

## பாடச் சுருக்கம்

- வணிகவாதத்திலிருந்து தொழில் முதலாளித்துவத்திற்கும், அதன்பின் நிதி முதலாளித்துவத்திற்கும் என ஏற்பட்டுக் கொண்டிருந்த மாற்றம் ஏகாதிபத்தியத்தில் நிலைகொண்டது விளக்கப்பட்டுள்ளது.



12th_History_TM_Unit_13_V2.indd 245 1/6/2022 1:53:52 AM

- மிகை உற்பத்தியை விற்பதற்கு, மூலப்பொருள்களைக் கொள்முதல் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் அதற்காக காலனிய நாடுகளைத் தேடுவதிலும் அதை முன்வைத்து ஐரோப்பாவின் பெரும் சக்திகளிடையே மோதல் ஏற்பட்டதையும் பற்றி விவாதிக்கப்பட்டுள்ளது.
- ஜப்பான் ஆசியாவில் ஒரு ஏகாதிபத்திய சக்தியாக உருவெடுத்தது பற்றியும் அதன் விரிவாக்கக் கொள்கை பற்றியும் கூறப்பட்டுள்ளது.
- ஐரோப்பா இரு போர்முகாம்களாக வடிவெடுத்து கூட்டணியாகவும், எதிர்–கூட்டணியாகவும் பிரிந்து நின்றமை விவரிக்கப்பட்டுள்ளது.
- ஜெர்மனியின் முரட்டுப்போக்கு, தனது பிரதேசங்களான அல்சேசையும் லொரைனையும் ஜெர்மனி ஆக்கிரமித்தமையால் பிரான்ஸ் கொண்ட பகையுணர்வு, ஜப்பானின் விரிவாக்கக்கொள்கை, பால்கன் பகுதியில் ஏற்பட்ட அதிகாரமைய அரசியல் போன்றவை எவ்விதம் முதல் உலகப்போருக்கு வழிவகுத்தனவென்பது விளக்கப்பட்டிருக்கிறது.
- எல்லைகளில் நடந்த போர்களும் பிற பிராந்தியங்களில் நடத்தப்பட்ட போர்களும் விபரமாகச் சொல்லப்பட்டுள்ளது.
- ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள், போக்குகள், விளைவுகள் போன்றவை ஆராயப்பட்டுள்ளது.
- ஜெர்மனி நீர்மூழ்கிகளை ஏவியதன் பின் அமெரிக்கா போரில் தலையிட்டமையும் அதனைத்தொடர்ந்து தோழமைநாடுகள் இறுதியான வெற்றியினை அடைந்தமையும் சொல்லப்பட்டுள்ளது.
- பாரிஸ் அமைதி ஒப்பந்தம் குறித்தும் போரின் முடிவுகள் பற்றியும் உள்ளார்ந்த தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
- பன்னாட்டு சங்கம் பற்றியும் உலக அமைதியை நிலைநாட்ட அது ஆற்றிய பங்கு பற்றியும் விமர்சனநோக்கில் எடுத்தியம்பப்பட்டிருக்கிறது.
- பாசிச அரசுகளின் ஏற்றம் மற்றும் இறக்கம் ஆகியவை பற்றி விபரமாக சொல்லப்பட்டுள்ளது.

## பயிற்சி

81DVP

### I சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. ஜெர்மனியின் முன்னேறி வந்துகொண்டிருந்த படைகளை பிரான்ஸ் வெற்றிகரமாக தடுத்து தோற்கடித்த போரின் பெயர் என்ன?

   (அ) மார்னே போர் (ஆ) டானென்பர்க் போர்

   (இ) வெர்டூன் போர் (ஈ) சோம் போர்

2. 'அரசின் தடையற்ற' (Laissez Faire) என்னும் பதத்தை உருவாக்கியவர் ________ ஆவார்.

   (அ) ஜான் A. ஹாப்சன் (ஆ) கார்ல் மார்க்ஸ்

   (இ) ஃபிஷர் (ஈ) கௌர்னே

3. *An Inquiry into the Nature and Cause of the Wealth of Nations* என்ற நூலை எழுதியவர் ________ ஆவார்.

   (அ) ஆடம் ஸ்மித் (ஆ) தாமஸ் பைன்

   (இ) குஸ்னே (ஈ) கார்ல் மார்க்ஸ்

4. இங்கிலாந்து ________ ஆம் ஆண்டில் தடையற்ற வணிகக் கொள்கையைப் பின்பற்றத் துவங்கியது.

   (அ) 1833 (ஆ) 1836 (இ) 1843 (ஈ) 1858

5. **கூற்று:** பத்தொன்பதாம் நூற்றாண்டின் இரண்டாவது பாதியில் பல நாடுகள் மிகைஉற்பத்தியால் பிரச்சனைகளை எதிர்கொண்டன.

   **காரணம்:** மிகைஉற்பத்தி, நாடுகளை புதிய சந்தைகளைக் கண்டுபிடிக்க அழுத்தங்கொடுத்தது.

   (அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

   (ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

   (இ) கூற்று சரி. காரணம் தவறு

   (ஈ) கூற்று தவறு. காரணம் சரி

6. 1879ஆம் ஆண்டில் ________ கட்டண சட்டத்தை இயற்றியது.

   (அ) ஜெர்மனி (ஆ) பிரான்ஸ்

   (இ) பிரிட்டன் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

7. ________ க்குப் பின் ஷிமனோசெகி ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

   (அ) ரஷ்ய–ஜப்பனியப் போர்

   (ஆ) இரண்டாம் அபினிப் போர்

   (இ) இரண்டாம் ஆங்கிலோ–சீனப் போர்

   (ஈ) சீன–ஜப்பானியப் போர்

8. போர்ட்ஸ்மவுத் ஒப்பந்தம் ஏற்படும் பொருட்டு மத்தியஸ்தம் புரிந்த நாடு ________ ஆகும்.

   (அ) ஸ்பெயின் (ஆ) பிரிட்டன்

   (இ) அமெரிக்க ஐக்கிய நாடு (ஈ) பிரான்ஸ்



12th_History_TM_Unit_13_V2.indd 246 1/6/2022 1:53:52 AM

9. எந்த நாடு 21 நிர்ப்பந்தங்களை புதிதாக உருவாக்கப்பட்ட சீன குடியரசின் தலைவர் முன் சமர்ப்பித்தது?

(அ) பிரான்ஸ் (ஆ) ரஷ்யா

(இ) ஜப்பான் (ஈ) பிரிட்டன்

10. ______ஐ அடிப்படையாகக் கொண்டு அல்பேனியா எனும் புதுநாடு உருவாக்கப்பட்டது.

(அ) புக்காரெஸ்ட் உடன்படிக்கை,1913

(ஆ) வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை, 1919

(இ) லண்டன் உடன்படிக்கை, 1913

(ஈ) செயின்ட் ஜெர்மெய்ன் உடன்படிக்கை

11. கீழ்க்காண்பனவற்றுள் எந்நாடு மையநாடுகள் சக்தியில் அங்கம் வகிக்கவில்லை?

(அ) பல்கேரியா

(ஆ) ஆஸ்திரிய–ஹங்கேரி

(இ) துருக்கி

(ஈ) மாண்டிநீக்ரோ

12. பாரிசை நெருங்கிக்கொண்டிருந்த தாக்குதலை உணர்ந்து பிரெஞ்சு அரசு ______ பகுதிக்கு நகர்ந்து சென்றது.

(அ) மார்செல்லிஸ் (ஆ) போர்டியாக்ஸ்

(இ) லியோன்ஸ் (ஈ) வெர்செய்ல்ஸ்

13. கீழ்க்காண்பனவற்றுள் வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தின் பகுதியாக கருதப்படாதது எது?

(அ) ஜெர்மனி அல்சேஸ் மற்றும் லொரைன் பகுதிகளை பிரான்சிடம் ஒப்படைக்க வேண்டும்

(ஆ) சார் பள்ளத்தாக்கு பிரான்சிற்கு வழங்கப்பட வேண்டும்

(இ) ரைன்லாந்தை தோழமை நாடுகள் ஆக்கிரமித்துக் கொள்ளவேண்டும்

(ஈ) டான்சிக் போலந்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு செல்லப்பட வேண்டும்

14. கீழ்க்காண்பனவற்றுள் சரியாகப் பொருத்தப்படாத ஒன்றைச் சுட்டுக.

(அ) விடுதலை ஆணை – இரண்டாம் அலெக்ஸாண்டர்

(ஆ) இரத்த ஞாயிறு – இரண்டாம் நிக்கோலஸ்

(இ) ரஷ்யாவில் 500 அடிமைகளின் கலவரங்கள் – முதலாம் நிக்கோலஸ்

(ஈ) பிரெஸ்ட்–லிடோவ்ஸ்க் உடன்படிக்கை – மூன்றாம் அலெக்ஸாண்டர்

15. **கூற்று:** பன்னாட்டு சங்கம் அதிகாரத்தை செயல்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

**காரணம்:** "கூட்டுப் பாதுகாப்பு" என்ற கொள்கையை மெய் வழக்கத்திற்குள் நடைமுறைப்படுத்த முடியவில்லை.

(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(இ) கூற்று சரி. காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

16. **கூற்று:** உலகையே கடுமையாக பாதித்தப் பொருளாதார பெருமந்தம் சோவியத் ரஷ்யாவை பாதிக்கவில்லை.

**காரணம்:** நிலம் சமூக உடைமையாக அறிவிக்கப்பட்டு ஏழை மக்களுக்குப் பிரித்து வழங்கப்பட்டது.

(அ) கூற்றும் காரணமும் சரி. காரணம் கூற்றை விளக்குகிறது

(ஆ) கூற்றும் காரணமும் சரி. ஆனால் காரணம் கூற்றை விளக்கவில்லை

(இ) கூற்று சரி. காரணம் தவறு

(ஈ) கூற்று தவறு. காரணம் சரி

17. பன்னாட்டு சங்கத்தின் முதல் பொது செயலாளரான எரிக் ட்ரம்மோன்ட் ______ நாட்டைச் சேர்ந்தவர் ஆவார்.

(அ) பிரான்ஸ் (ஆ) தென்னாப்பிரிக்கா

(இ) பிரிட்டன் (ஈ) அமெரிக்க ஐக்கிய நாடு

18. பன்னாட்டு சங்கம் ______ ஆம் ஆண்டு கலைக்கப்பட்டது.

(அ) 1939 (ஆ) 1941

(இ) 1945 (ஈ) 1946

19. ஹிட்லரை ஜெர்மனியின் பிரதம அமைச்சராக நியமித்தவர் யார்?

(அ) ஜெனரல் லூடன்டார்ஃப்

(ஆ) வான் ஹிண்டன்பர்க்

(இ) ஜெனரல் ஸ்மட்ஸ்

(ஈ) ஆல்ஃபிரட் வான் பெத்மண்

20. முசோலினி ஆசிரியராகப் பணியாற்றிய பத்திரிகையின் பெயர் யாது?

(அ) அவந்தி (ஆ) ப்ராவ்தா

(இ) மார்க்சிஸ்ட் (ஈ) மெய்ன் காம்ப்

## II. குறுகிய விடையளிக்கவும்.

1. ஜெர்மனி பிரான்சை தனிமைப்படுத்த முனைந்ததேன்?
2. பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே 1904இல் கையெழுத்திடப்பட்ட நாடுகளுக்கிடையே நட்புறவின் (Entente Cordiale) முக்கியத்துவம் யாது?
3. பால்கன் சிக்கலின் விளைவுகள் உள்ளடக்கிய சிறப்புக்கூறுகளை எழுதுக.
4. "மூவர் தலையீடு" எனப்படுவது யாது?
5. முதல் உலகப்போரின் காலத்தில் கிழக்கு திசையில் வான் ஹிண்டன்பர்க் ஆற்றியப் பங்கை விளக்குக.
6. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக.
7. நிகிலிசம் என்றால் என்ன?
8. கிரீசிற்கும் பல்கேரியாவிற்குமிடையே 1925இல் எழுந்த சர்ச்சையை பன்னாட்டு சங்கம் எவ்வாறு தீர்த்துவைத்தது?
9. லேட்டரன் உடன்படிக்கை எவ்வாறு முசோலினியின் அதிகாரத்திற்கு சட்டரீதியான அங்கீகாரம் வழங்கியது?
10. மூன்றாவது ரெய்ச் என்றால் என்ன?

## III. சுருக்கமாக விடையளிக்கவும்.

1. முதல் மொராக்கோ சிக்கல் எவ்வாறு நிகழ்ந்தது?
2. அகழிப் போர் எவ்வாறு நடத்தப்பட்டது?
3. மிக ஆபத்தான U–படகுகள் மற்றும் Q–கப்பல்கள் பற்றி நீவீர் அறிந்தது என்ன?
4. போரில் அமெரிக்கா நுழைந்தபிறகு நிகழ்ந்தவற்றை வரிசைக்கிரமமாக எடுத்துக் கூறுக.
5. ரஷ்யப் புரட்சி அந்நாட்டிற்கு வெளியில் ஏற்படுத்திய பாதிப்புகளை விளக்குக.
6. பன்னாட்டு சங்கம் வெற்றிகரமாக முடித்துவைத்த சிக்கல்கள் பற்றி குறிப்பு வரைக.
7. பொருளாதார பெருமந்தம் எவ்வாறு அரசியல் தளத்தில் தாக்கத்தை வெளிப்படுத்தியது என்பதனை விளக்குக.

## IV. விரிவான விடையளிக்கவும்.

1. முதல் உலகப்போரின் காரணங்களையும், விளைவுகளையும் கணக்கிடுக.
2. "மார்க்ஸ் தீப்பொறியை வழங்கவும், அதை லெனின் தீபமாக ஏற்றினார்" – தெளிவுபடுத்துக.
3. வெர்செய்ல்ஸ் ஒப்பந்தம் ஜெர்மனியைப் பொறுத்தமட்டில் கடுமையானதாகவும், அவமானப்படுத்தக்கூடியதாகவும் தெரிந்தது – இக்கூற்றினுக்கான ஆதாரப்பின்புலத்தை உறுதிப்படுத்துக.
4. முசோலினியும், ஹிட்லரும் பாசிச அரசுகளை முறையே இத்தாலியிலும் ஜெர்மனியிலும் நிறுவ சாதகமான சூழல் எழுந்தமையை விளக்குக.

## V. செயல்பாடுகள்.

1. இணையத்தில் (You Tube) இருக்கும் முதல் உலகப்போர் தொடர்பான காணொளிகளை மாணவர்களுக்குத் தெரியப்படுத்தலாம்.
2. முதல் உலகப்போருக்கு முன்பும் பின்பும் வரைபடத்தில் நிகழ்ந்துள்ள மாற்றங்களை ஒப்பிட்டு போர் நடந்த பகுதிகளைக் குறிக்க மாணவர்களுக்கு ஆசிரியர்கள் உதவலாம்.
3. பன்னாட்டு சங்கத்தின் வெற்றி, தோல்விகளை மாணவர்களைக் கொண்டு விவாதிக்கச் செய்யலாம்.
4. கூகுளில் கிடைக்கும் கான் அகாடமியின் பாசிசவாதம் பற்றிய காணொளிக் காட்சிகளை மாணவர்களும், ஆசிரியர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

## மேற்கோள் நூல்கள்


- R.D. Cornwell, *World History in the Twentieth Century* (London: Longman, 1972).
- Edward McNall Burns, *Western Civilizations,* vol. 2 (New York: W.W. Norton, 1972).
- Richard Overy (ed.) *Complete History of the World* (London: Harper Collins, 2007).
- Chris Harman, *A People's History of the World* (New Delhi: Orient Longman, 2007).
- H.A. Davies, *An Outline History of the World* (Oxford: Oxford University Press, 2006).
- K.A. Manikumar, *A Colonial Economy in the Great Depression: Madras (1929–1937),* (Hyderabad: Orient Longman, 2003).


## மேலும் வாசிக்கத்தகுந்த நூல்


- டாக்டர் மு. ஆரோக்கியசாமி, ஐரோப்பிய வரலாறு (கி.பி. 1450 முதல் 1970 வரை), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை (ஆவணப் பதிப்பு: ஆகஸ்ட் – 2017).





12th_History_TM_Unit_13_V2.indd 248 1/6/2022 1:53:52 AM

## A-Z கலைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| கடுமையான திடீர் தாக்குதல் | **onslaught** | a sudden and severe onset of trouble |
| வணிகவாதம் | **Mercantilism** | the theory that trade generates wealth and a government should encourage it by protecting domestic trade from foreign competition. |
| பேரழிவை ஏற்படுத்தும் வெடிபொருட்கள் | **ammunition** | any nuclear, chemical or biological material that can be used as a weapon of destruction |
| மீன்பிடிப் படகு | **trawler** | a fishing boat |
| தற்காலிகப் போர் நிறுத்தம் | **armistice** | a formal agreement to stop fighting for a particular time. |
| சட்டஒப்பந்தம் | **covenant** | agreement by legal deed |
| பண்ணையாள் | **serf** | a person who is tied to the land and to its holder, the land lord. |
| வெறுக்கத்தக்க | **abominable** | detestable, hateful |
| பாட்டாளி வர்க்கம் | **proletariat** | working class |
| அரசு இல்லாத கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் சமுதாயத்தில் நம்பிக்கை | **anarchism** | belief in the abolition of state and organisation of society on a voluntary, cooperative basis without recourse to force or compulsion |
| பதவி துறத்தல் | **abdication** | a formal resignation and renunciation of power, stepping down |
| பறிமுதல் செய்தல் | **confiscation** | seizure of property |
| குண்டாந்தடி | **cudgel** | a short, thick stick used as a weapon |
| முழங்கால் வரையிருக்கும் காலணி | **jackboot** | a heavy military boot extending above the knee |
| பித்துப்பிடித்த | **lunatic** | a person who is mentally ill |
| ரத்து செய்தல், ஒழித்தல் | **annulling** | abolishing, invalidating |

## இணையச் செயல்பாடு

### ஏகாதிபத்தியமும் அதன் தாக்கமும்

**இந்த செயல்பாட்டின் மூலம் முதல் உலகப்போர் நிகழ்வுகளை துல்லியமாக தெரிந்து கொள்ள முடியும்.**





**படிநிலைகள்**

படி – 1 : URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க

படி – 2 : திரையில் தோன்றும் படத்தில் "Enter" ஐ சொடுக்கவும், பின்னர் கீழ்ப்பகுதியில் இருக்கும் காலக்கோட்டில் எதாவது ஒரு ஆண்டை தேர்வு செய்யவும் (உதாரணம்: 1914)

படி –3 : முதல் உலகப்போர் பற்றிய தகவல்களை ஒவ்வொன்றாக அறிய திரையில் தோன்றும் உலக வரைபடத்தில் ஏதாவது ஒரு படத்தொகுப்பை தேர்ந்தெடுக்கவும்.




படி 1




படி 2




படி 3

**உரலி:** https://www.abmc.gov/sites/default/files/interactive/interactive_files/WW1/index.html

*படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

*தேவையெனில் Adobe Flash ஐ அனுமதிக்க.



12th_History_TM_Unit_13_V2.indd 250 1/6/2022 1:53:54 AM